த்திய அட்டவணை

269

ஸ்ரீ எம். பெருமாள் சேர்வை,
மோகனூர், நாமக்கல்,
சேலம்
" வைத்திய அட்டவணை சுட்டு-4".

1/2.

269

269 266

தேதி: 23.3.64.
ஓலைச் சுவடியின் பெயர்: "வைத்திய அட்டவணை" கட்டு-4.
உரிமையாளரின் பெயர்: எம். பெருமாள் சேர்வை.
இடம்: மோகனூர், நாமக்கல், சேலம்.

***

(இதன் கண் முன்னுள்ள மந்திரம் முதலியன விடுத்து பின்னும் தெளிவாக யில்லாத அதாவது பிரதி செய்த பயன்படாதவைகளையும் விடுத்து செப்பமாக வுள்ள மருந்து முறை மட்டும் பிரதி செய்யப் பட்டுள்ளன)

***

<u>சேஉட்டும சுரத்துக்கு கசாயம்:-</u>

ஆடாதோடை நரம்பு பலம்.உ, பற்படாகம் பலம்.க, சீந்திக் கொடி பலம்.க, முந்திரிப் பழம் பலம்.$\frac{1}{2}$, பேரீச்சம் பழம் பலம்.$\frac{1}{2}$, கடுகுரோகணி பலம்.$\frac{1}{4}$ கட்டி இள வறுப்பாய் வைத்து கசாயம் போட்டுக் கொடுக்கவும்.

<u>அஸ்தி குளிர் சுரத்துக்கு கசாயம்:-</u>

ஆடாதோடை நரம்பு பலம்.உ, பற்படாகம் பலம்.க, சீந்திக் கொடி பலம்.க, நன்னாரி வேர் பலம்.க, சிறகாஞ்சொறி வேர் பலம்.க, சந்தனம் பலம்.$\frac{1}{2}$ பொன் முசுட்டை வேர் பலம்.$\frac{1}{2}$, சுக்கு பலம்.$\frac{1}{2}$, சி அரத்தை பலம்.$\frac{1}{2}$, வெட்பாலரிசி பலம்.க, எல்லாந் தட்டி போட்டு நாலு படி தண்ணீர் விட்டுஅரைப்படியாய் காய்ச்சி மூன்று நாளைக்கு கொடுக்கவும். சிலேஉட்டும பித்த சுரம் போம்.

<u>மிரண்டு, மிரண்டு விழிக்கிற சுரத்துக்கு:-</u>

ஆடாதோடை நரம்பு பலம்.க, பற்படாகம், சீந்திக் கொடி, பேரீச்சம் பழம், முந்திரிப் பழம் வகைக்கு பலம்.க, எல்லாந் தட்டி போட்டு வறுத்து நாலு படி தண்ணீர் விட்டுஅரைப்படியாய்க் காய்ச்சி மூன்று நாளைக்கு சாப்பிடவும்.

<u>சுரத்தின் மேல் பேதிக்கு கசாயம்:-</u>

பொன் முசுட்டை வேர், கோரைக் கிழங்கு, அத்திப் பட்டை, நீர்ப்புலாம் வேர், நாகப்பட்டை, மாவிலிங்கந் கொழுந்து, வெட்டி வேர், நாகப்பட்டை, மாவிலிங்கம் கொழுந்து, வெட்டி வேர், விலாமிச்சை வேர், அதிவிடையம், அதிமதுரம், கோஉட்டம் வகைக்கு பலம்.க, எல்லாந் தட்டி போட்டு கசாயம் வைத்துச் சாப்பிடவும் மூன்று நாளைக்கு சாப்பிடவும்.

<u>வாந்தி சுரத்துக்கு கசாயம்:-</u>

நல்ல துளசி, நாய்த் துளசி, அரத்தை, சுக்கு, கொத்தமல்லி, வகைக்கு பலம்.$\frac{1}{2}$ தட்டி போட்டுக் கசாயம் பண்ணி சாப்பிடவும்.

குளிர் சுரம் வெள்ளை தீரும்:- கொடிக் கள்ளிக் கொழுந்து பூண்டு, மிளகு அரைத்துக் களச்சிக்காய் அளவு சாப்பிடவும். இச்சா பத்தியம்.

<u>அஸ்தி வாத சுரத்துக்கு:-</u> திப்பிலி பலம்.$\frac{1}{2}$, கிராம்பு பலம்.$\frac{1}{2}$, சுக்கு பலம்.$\frac{1}{2}$, தேவதாருகட்டை பலம்.$\frac{1}{2}$, மிளகு பலம்.$\frac{1}{2}$, கண்டங்கத்திரி வேர், சீந்திக் கொடி, பற்படாகம் கசாயம்.

<u>பித்த வாத சிலேட்டும சுரத்துக்கு கசாயம்:-</u>

அரத்தை, சுக்கு, சீரகம், சதகுப்பை, சோம்பு மல்லிகை, முந்திரிப் பழம், தாளிச பத்திரி, நெல்லி யீர்க்கு புளியம் யீர்க்கு, வேப்பயீர்க்கு கருவேப்பிலை, பேய்ப்புடல் வகைக்கு பலம்.$\frac{1}{2}$, எல்லாந் தட்டி போட்டு நாலு படி தண்ணீர் விட்டு சுண்டக் காச்சி மூன்றுநாளைக்கு இரண்டு வேளையும் கொடுக்கவும்.

<u>ஒட்டுக் குளிர் சுரத்துக்கு:-</u> கருஞ்சீரகம் வறுத்து நறுக்கி தேனும் விட்டுக் குழைத்து மூன்று நாள் சாப்பிடவும்.

<u>பித்த சுரத்துக்கு கசாயம்:-</u>

சிறுவ வேர், சிறகாஞ்சொறி வேர், பக்திரி வேர், செவ்வல்லி கொடி, நன்னாரி வேர், ஆவாரை வேர், சடை தம்பை வேர், அதிமதுரம், கோஉட்டம், சீரகம், கொத்தமல்லி பேரீச்சம் பழம் வகைக்கு பலம்.$\frac{1}{2}$ ஆனை திப்பிலி நெல்லிமுள்ளி, சுக்கு எல்லாந் தட்டி போட்டு கசாயம் நாலு படி தண்ணீர் விட்டு மூன்று நாளைக்கு சாப்பிடவும். கோரோசினை குழைத்துச் சாப்பிடவும். பித்த சுரம், தோஉஷம், நாவறட்சி, நீர்தாகம் உடம்பு யெரிச்சல், காந்தல், வாயூறல், சிரசில் பாரம், மயக்கம், எல்லாம் போகும்.

<u>சிலேட்டும சுரம், யிருமல் சிறு நீர்க் கடுப்பு, முத்திர வலிக்கு யிசிவுக்கு கசாயம்:-</u> சுக்கு திப்பிலி, கிராம்பு, யிலுப்பைப் பட்டை, அக்கிரகாரம், கறிமுள்ளி, கடுக்காய் தோலு

ஆடாதோடை நரம்பு, கற்பூர வல்லி, முந்திரிப் பழம் வகைக்கு பலம். ½ எல்லாம் தட்டிப் போட்டு நாலு படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி மூன்று நாளைக்கு கோரோசினை விராகனிடை. ½ இழைத்து சாப்பிடவும். புளி, புகையிலை தள்ளுபட.

குளிர் சுரத்துக்கு:-

வேலிப் பருத்தி தழை, புண்டு மிளகு, அரைத்து மூன்று வேளை கசாயம்.

மூன்று வகை சுரத்துக்கு கசாயம்:-

சுக்கு, திப்பிலி, மிளகு, திப்பிலி மூலம், சிறுதேக்கு, நிலவேம்பு, கோஷ்டம் மல்லிகை சதகுப்பை, விலாம்பிச்சை வேர், சித்தாமுட்டி வேர், விழுதி வேர், பேய் புடல், கோரைக் கிழங்கு, ஆதலை, கண்டங்கத்திரி வேர் வகைக்கு பலம். ½, எல்லாந் தட்டிப் போட்டு நாலு படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி மூன்று நாளைக்கு சாப்பிடவும்.

வாத சுரம், பித்த சுரம் அய்ய சுரங்களுக்கு கசாயம்:-

முக்காவேளை வேலிப் பருத்தி வேர், கோரைக் கிழங்கு, சோத்துக் கத்தாழைச் சருகு, முடக் கொத்தான், கடுக்காய், சுக்கு, சிறுதேக்கு, சிறுகாஞ்சொறி வேர், சங்கம் வேர், வேப்பம் பட்டை யிர்க்கு வகைக்கு பலம். ¼, கசாயம் பண்ணி மூன்று நாளைக்கு சாப்பிடவும்.

பித்த சுர கசாயம்:- சீந்தில் கொடி, கோரைக் கிழங்கு, பற்படாகம், வெட்டி வேர், விலாமிச்சை வேர், சந்தனம், சுக்கு, சித்தாமுட்டி வேர் வகைக்கு பலம். ¼ தட்டிப் போட்டு கசாயம் பண்ணிச் சாப்பிடவும்.

அய்ய சுர கசாயம்:- ஆடாதோடை, சிறுதேக்கு, கையாந்தகரை வேர், சங்கு வேர், சுக்கு, மிளகு வகைக்கு பலம். ¼, எல்லாந் தட்டிப் போட்டு கசாயம் பண்ணி மூன்று நாள் சாப்பிடவும்.

பெண்களுக்கு மலட்டுசூ சூலைக்கு:-

விளக்கெண்ணை படி. க, பச்சை மஞ்சள் படி. க, தேங்காய் பால் படி. க, நல்ல வேளைச் சாறு படி. க, விழுதிச் சாறு படி. க, நிலையாவரைச் சாறு படி. க, முப்பூ விராகனிடை. க, சுக்கு பலம். க, மிளகு பலம். க, திப்பிலி பலம். ½, கடுக்காய் பலம். ½, நெல்லிக்காய் பலம். ½, தானிக்காய் பலம். ½ யிந்துப்பு பலம். ¼ இந்த சரக்குகளை யெல்லாம் அரைத்து குழப்பி மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து விட்டுக்குத் தூரம் போன நாளிக்கு உடனே 1/8 படி வீதம் காலமே மூன்று நாளைக்கு கொடுக்கவும். மிளகு சாறும், சாதமும் மூன்று நாளைக்கு சாப்பிடவும். இதுக்கு அநுகூலம் வராவிட்டால் யிந்தப் படி மூன்று முறை சாப்பிடவும் வயத்து வலி நிற்கும். கெற்பந் தரிக்கும். கை கண்டது.

அறுகட்டிக்கு: குதக வாய்வுக்கு; உதிரக் கட்டுக்கு:-

நவச்சாரம் பலம். க, கொடிக் கள்ளி பால் விட்டு ஒரு சாமம் அரைத்து பட்டாணிக் காய்ப் பிரமாணம். சாப்பிடவும். பேதியான பிறகு மோரு சாதம் சாப்பிடவும். அதில் நிற்காதே போனால் எலுமிச்சம் பழச் சாறு சாப்பிடவும்.

கீழா நெல்லித் தயிலம்:-

கீழா நெல்லி சமூலம் ஆக்கு சாறு படி. க, 8 படி தண்ணீர் விட்டு நல் லெண்ணை படி. க, சீரகம் பலம். க, நசுக்கிப் போட்டு கசாயம் விட்டுக் காச்சி மெழுகு பதத்தில் காய்ச்சி முழுகவும். அஸ்தி சுரம், மேல் எரிச்சல், கை கால் எரிவு, கண்ணெரிவு, பித்த சூடு இவை யெல்லாம் கேட்கும்.

கெற்ப ஸ்திரிகளுக்கு சூட்டுக்கு:-

சீரகம் பலம். உ, மல்லிகை பலம். க, நசுக்கி சீனி சர்க்கரை கலந்து ரெண்டு நேரமும் சாப்பிடவும். நெய்தல் கிழங்கு பலம். க, தட்டி கசாயம் போட்டு சாப்பிடவும்.

கெற்ப ஸ்திரி சுரத்துக்கு:-

கருவேப்பிலை பலம். க, கொத்தமல்லி பலம். க, சுக்கு பலம். ¼ கசாயம் பண்ணி சாப்பிடவும்.

கெற்ப ஸ்திரி வயது ளைவுக்கு:- ரஸ்தாளிப் பழம் கனிவாய் புளியங் கொட்டைத் தோல் அரைத்துப் பிசைந்து பனியில் வைத்துப் பிளிந்து மூன்று நாள் காலமே கொடுக்கவும்.

கெற்ப ஸ்திரி சூட்டுக்கு கசாயம்:- சீரகம் பலம். ½, பனைவெல்லம் பலம். ½, தட்டிப் போட்டு கசாயம் பண்ணிக் கொடுக்கவும். திப்பிலி பலம். ½ அரைத்து முலையில் தடவவும்.

பிள்ளைகளுக்கு பொருமல் மாந்தக் கழிச்சலுக்கு:- வேலிப் பருத்தியிலை நருக்கிச் சாறு

பிழிந்து பெருங்காயம், பூண்டு, ஓமம், அரிசி, மிளகு, சுக்கு, வசம்பு சுட்ட கரியெல்லாம் சேர்த்து அரைத்து வேளை பூவும், புளிந்து குழப்பி மூன்று வேளை போடவும். உப்பு, புளி தள்ளுபடி.

பொருமாந்த பேதி அறியப் பட்டால் கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், வலம்புரிக் காய், கார்போகரிசி, சுக்கு, மிளகு, பூண்டு காயம் ஓமம் வகைக்கு விராகனிடை.க, வேலிப் பருத்திச் சாறு விட்டு அரைத்து எருமை வெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி இரண்டு வேளை மூன்று நாளைக்கு போடவும். உப்பு, புளி தவிர்க்கவும்.

பிள்ளைகளுக்கு சளியின் பேரில் மாந்தம் கண்டால்:-

நாய்த் துளசி, பூனை முள்ளி, தழை யெல்லாம் வகைக்குச் சாறு பிழிந்து பூண்டு வசம்பு, ஓமம், முள்ளுஅரத்தை சாறு விட்டு அரைத்து கலக்கிக் கொடுக்கவும். உப்பு, புளி தள்ளவும்.

பிள்ளைகளுக்கு சளியின் பேரில் தண்ணீர் தாகத்துக்கு கசாயம்:-

வசித் தகரை தழை வெந்தயம் ஈர வெங்காயம் யெல்லாம் போட்டு தண்ணீர் விட்டுக் கசாயம் பண்ணிக் கொடுக்கவும். மூன்று வேளை கொடுக்கவும்.

பிள்ளைகளுக்கு சளிக்கு யெண்ணை:-

வல்லாரை, வசித் தகரை, தழை சேர்த்துக் கற்றாழை வேர் தண்ணீர் யெல்லாம் இடித்து பிழிந்து வடிகட்டி விளக் கெண்ணை படி.½ வெங்காயம் படி.1/8, வெந்தயம் பலம்.க, யேலம் பலம்.½, சீனி சர்க்கரை பலம்.1, யெல்லாம் போட்டுக் காய்ச்சி கொடுத்து வரவும். புளி ஆகாது.

குதக வாய்வினால் உதிரக் கட்டு வயத்து வலி பெரும்பாட்டுக்கு:-

கல்லு பலம்.5, சிறு செருப்படி தழை பலம்.க, குடோரி தழை பலம் அரைத்து உள்ளுக்கு வைத்து சீலை மண் செய்து தெசபுடம் போட்டு மேற்படி பற்பத்தை யெடுத்து பணவிடை.உ தேனில் குழைத்து இரண்டு வேளை கால் மண்டலம் சாப்பிடவும். பத்தியம் வாய்வு பதார்த்தம் கூடாது.

பேதிக்கு:-

கடுக்காய், சுருகு, இந்துப்பு, பெருங்காயம், யெண்ணை வெங்காரம், ரசம் மகேஸ்வரி இலை, திப்பிலி, அரிதாரம், கருஞ்சீரகம் கருநாபி, கடுகுரோகணி, வகைக்கு விராகனிடை.க, நேர்வாளம் விராகனிடை.12, ஆறு விராகனிடை எருமை, கிடாரி சாணியில் வெவிச்சு நஞ்சு யெடுக்கவும். பாதியை வறுத்து நஞ்சு யெடுக்கவும். தென்னங் குரும்பைக் கரி விராகனிடை.5, பனைவெல்லம் விராகனிடை.5 எல்லாம் நறுக்கி வேலிப் பருத்திச் சாறு விட்டு ஒரு சாமம் அரைக்கவும். பொற்றலைக் கையான் சாறு விட்டு ஒரு சாமம் அரைக்கவும். தேங்காய்ப் பால் விட்டு ஒரு சாமம் அரைக்கவும். ஆள் அறிந்து மை கொடுக்கவும். சன்னி சுரம், தோஷம், பித்தம், மயக்கம், காமாலை பாம்பு விஷம் சோகை அறுபான அறிந்து கொடுக்கவும். மூறி ஆவின் மோர்; பச்சைத் தண்ணீர் வசம்பு சுட்டு எருமை மோர் புளிந்து கொடுக்கவும்.

உடம்பு அதிர்ச்சி சன்னி வலி துடுப்புக்கு:-

சித்திர மூல வேர் பலம்.½ மிளகு பலம்.க, இரண்டுந் தட்டி போட்டு கசாயம் பண்ணி கொடுக்கவும்.

குதக வாய்வுக்கு ஆறு கட்டிக்கு:-

பேய்க் குமட்டிச் சாறு படி.க, அட்டு உப்பு படி.க, கல்லு உப்பு பலம்.க இந்துப்பு பலம்.க, வள்ளிவப்பு பலம்.க, சவுட்டுப்பு பலம்.க, சுவாசாரம் பலம்.க எல்லாம் நறுக்கி மேற்படி சாற்றில் கரைத்து யெரித்து உப்பு யெடுத்து மூன்று விரல் கொண்டது ஆறு வாயில் நீரும் சாப்பிடவும். மீன் கருவாடு ஆகாது. மூன்று நாள் காலமே சாப்பிடவும். சுபிலை யெண்ணை.

சன்னி யிசிவு தோஷம் இவைகளுக்கு:-

வேப்பெண்ணை படி.¼, விளக்கெண்ணை படி.¼, நெய் படி.½, முசுறு முட்டைச் சாறு படி.¼, கோழிமுட்டை, செங்காரு பூண்டு பலம்.க, வசம்பு பலம்.க, நிலவேம்பு பலம்.க, வாங்கி நறுக்கி பொட்டணங் கட்டி யெண்ணெயில் தொங்க விட்டு காய்ச்சி இறக்கவும். இறக்கினவுடன் வீரம், பூரம், மகேஸ்வரி இலை, கஸ்தூரி, கோரோசனை வகைக்கு விராகனிடை.க, நறுக்கிப் போட்டுக் கொடுக்கவும். உப்பு, புளி தள்ளவும். சுரம், சன்னி தோஷம், இளைப்பு, பல்லுகட்டு, சுக சன்னி மயக்கம், யெல்லாம் கேட்கும்.

வாய்வு மந்த பேதிக்கு:-

திப்பிலி, சீனி சர்க்கரை, நெல்பொரி, மாங்கொட்டை ஓடம் மயில் இறகு சுட்டகரி

தேன் கரும்பு பாகு எல்லாம் நறுக்கி யிளைத்துக் கொடுக்கவும்.

வாய் உமட்டுக்கு:- உக்கிராட்சக் காய், சுக்கு, அரத்தை யெல்லாந் தட்டி போட்டு கசாயம் பண்ணி கொடுக்கவும்.

முருங்கைப் பூவு லேகியம்:-

நல்ல முருங்கைப் பூவு பலம்.10, ஆவின் பால் படி.க, சீனி சர்க்கரை சீனி கல்கண்டு பலம்.உ, கஞ்சா பலம்.½, கசகசா பலம்.க, சுக்கு பலம்.க, சீரகம் க, வால்மிளகு பலம்.க, யேலம் பலம்.க, கிராம்பு பலம்.க, சாதிக்காய் பலம்.க, சாதிபக்கிரி பலம்.க, பிரட்டி மொக்கு பலம்.க, பசுவின் நெய் படி.½, தெட்டி பலம்.1/8 கஞ்சாவை சுத்தி பண்ணி பிரட்டி மொக்கை பாலில் வேக வைத்து நறுக்கி முருங்கைப் பூவை வேக வைத்து புளிந்து போட்டு பாலைக் காச்சி யெல்லாம் போட்டு தேனும் நெய்யும் விட்டு மெழுகு பதமாய் யெடுத்துக் ளைச்சிக் காய் பிரமாணம் இரண்டு வேளையும் அரை மண்டலம் சாப்பிடவும். இச்சா பத்தியம். கால் ஒச்சல், பசி, தாதுபுஷ்டி யெல்லாம் சவுக்கியம்.

மேக வெட்டைக்கு யேலாதி கடு:-

விளக்கெண்ணை படி.க, சேர்க்குக் கற்றாழைச் சாறு படி.க, மிளகு, தக்காளிச் சாறு படி.க, யேலம், அதிமதுரம், சடாமஞ்சி, கொத்தமல்லி, கோஷ்டம், அக்கிரகாரம், சீரகம், புழுகம், வால்மிளகு, லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, பறங்கிப் பட்டை வகைக்கு விராகனிடை.உ, பச்சை கற்பூரம் விராகனிடை.2½ குங்குமப்பூ விராகனிடை.½, கோரோசினை விராகனிடை.½, சீனி சர்க்கரை பலம்.10 யெல்லாம் நறுக்கி யெண்ணெயில் போட்டுக் காய்ச்சி இரண்டு வேளையும் போட்டுக் கறண்டி சாப்பிடவும். வெட்டைச் சூடு, கணை குளிர்ச்சி, உடம்பு சூடும் யெல்லாம் கேட்கும். இச்சா பத்தியம். புலால் ஆகாது.

ரச செந்தூரம்:-

ரசம் பலம்.க, நெல்லிக்காய் கெந்தகம் பலம்.½, வெள்ளை வெங்காரம் பலம்½ முன்றும் கல்வத்தில் அரைத்து மெல்லிய துணியில் வைத்து பொட்டணங் கட்டி அகலில் வைத்து மூடி சீலை மண் செய்து ஆற்று வாரி மணல் கொண்டு வந்து பொடிச் சட்டியில் பாதி பணலைக் கொட்டி மருந்து அகிலே யெடுத்து வைத்து அதற்கு மேலே மணலைக் கொட்டி சட்டி கொண்டு மூடி செசு குழி வெட்டி யெரி தீ கொட்டு புடம் போடவும். ஆறின பிறகு விக்கினேசுபர பூசை பண்ணி யெடுத்தால் செந்தூரமாகும். திப்பிலி, சுக்கு, சரியிடையாய் வறுத்து நறுக்கி ஒரு பணவிடை நால் கால் விராகனிடை செந்தூரமும் சேர்த்து தேனும் விட்டு மத்தித்து இரண்டு வேளை சாப்பிட்டு வரவும். புளி தள்ளவும். கிரந்தி, கரிச்சல், குன்மம், சூலி மேக வியாதி கொந்தித்த வியாதி, வர்ந்தி, மயக்கம், கிரகிரப்பு, பித்தம், அரோசிகம், அன்னதோஷம், பெரும்பாடு, புளித்தேப்பும் யெல்லாம் கேட்கும். ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடவும்.

மூலச் சூட்டினால் மலக் கொட்டுக்கு மருந்து:-

ஓமம் பலம்.க, கிராம்பு விராகனிடை.க, சேர்த்து வெதுப்படக்கிச் சாற்றில் ஊற வைத்து அரைத்து பனைவெல்லம் பலம்.க, சேர்த்து அரைத்து கொட்டைப் பாக்கு பிரமாணம் இரண்டு வேளை சாப்பிட்டு வரவும். பழையது தள்ளுபடி. இச்சா பத்தியம்.

வெட்டைக்கு:-

சலாசத்து, வெள்ளை வெங்காரம் இது இரண்டையும் ஜெயிச்சம் பழச் சாற்றில் ஊற வைத்து அந்தச் சாற்றில் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து ஒட்டுக்குள் வைத்து சீலை மண் செய்து பத்து ருட்டியில் புடம் போடவும். வேளை ஒன்றுக்கு பணவிடை வீதம் தேனிலாவது வெண்ணெயிலாவது சாப்பிடவும். பத்தியம் இச்சா பத்தியம்.

கண்டத்துக்கு மேல் பட்ட வியாதிக்குச் சூரணம்:-

நதலை சருனி வேர், சங்கம் வேர், செங்கத்தாரிப் பட்டை, கொடி வேலி வேர்ப் பட்டை, சுக்கு, சீரகம், பெருஞ்சீரகம், கடுகுரோகணி, அரத்தை சமபாகம் சூரணம் செய்து இரண்டு வேளை மூன்று விரல் கொண்டு சாப்பிடவும்.

தலை முழுகத் தயிலம்:- கார்த்திகைக் கிழங்கு, நிலக் குமிள் சமூலம், எருக்கு, கொடி வேலி, சீந்தி, சங்கம் குப்பி, வெள்ளைச் சாறணை, மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், மரமஞ்சள், கடுகுரோகணி, நல்லெண்ணெயில் காய்ச்சி முழுகவும்.

வீர மெழுகு:- சவ்வீரம் விராகனிடை.உ, சுக்கு விராகனிடை.4, ரசகற்பூரம் விராகனிடை.க, ரச செந்தூரம் விராகனிடை.க, சாதிலிங்கம் விராகனிடை.க, மிளகு விராகனிடை. திப்பிலி விராகனிடை.4 இந்த மூன்று சரக்கும் அரைத்து வடிகட்டி

முன் மருந்து நாலும் அதில் போட்டுதேன் விட்டு ஒரு சாமம் அரைத்து மாட்டுக் கொம்பு சிமிளில் வைத்துக் கொண்டு [illegible] விளங்காய் பிரமாணம் சாப்பிடவும். பத்தியம் இச்சா பத்தியம் நெஞ்சு வலி, யீரல், சூலைவலி, சூலைக் கட்டு குமர் வாய்வு, பிடிப்பு எல்லாம் கேட்கும்.

மேகக் கிரந்தி, சிரங்குகளுக்கு யெண்ணை :-

வத்திவிளக்கெண்ணை படி.க, வெங்காயச் சாறு படி.க, கிரந்தி நாயகச் சாறு படி.க, சீரகம் பலம்.க, சிறுகரை வேர் பலம்.க, இவ இரண்டையும் அரைத்து போட்டு மேற்படி சாறுகளையும் விட்டு எரித்து மெழுகு பதமாய்க் காய்ச்சி இறுத்து மன்று காலமே அரைக்கால் படி வீதம் சாப்பிடவும். ஆறு நாள் உப்பில்லாப் பத்தியம். ஏழா நாள் உப்பு வறுத்துக் கூட்டுகிறது. எட்டா நாள் புளி சுட்டுக் கூட்டுகிறது. ஒப்தாம் நாள் எண்ணை தேய்த்துக் கொள்ளுகிறது.

மேகச் சிரங்குகளுக்கு கெந்தக பற்பம் :-

கெந்தகம் விராகனிடை.8, பூரம் விராகனிடை.க, முலைப்பாலில் ஊற வைத்துக் கழுவிப் போட்டு காடி விட்டு நாலு சாமம் அரைத்து சூரிய புடமாய் வைத்து காயப் போட்டு வெண்ணெயில் பணவிடை வைத்து இரண்டு வேளை சாப்பிடவும். பத்தியம் இச்சா பத்தியம்.

கருமேக ஊறல் :-

ரசகற்பூரம் நேர்வாளம் கொடிக் கள்ளிப் பால், செங்கொட்டை வகைக்கு ஒரு கப்சிட விளக்கெண்ணெ படி.3/8-ல் இந்தப் போட்டுக் காச்சி காலமே சாப்பிடவும். புளி, புகையிலை தள்ளுபடி.

குஷ்ட ரோகத்துக்கு மருந்து :-

கொடிக் கள்ளிப் பட்டையை காய வைத்து இடித்து வச்சிர காயம் பண்ணி மூன்று விரல் கொண்ட அளவு போட்டுச் சாப்பிடவும். மோருஞ் சோறும் சாப்பிடவும். பத்து நாளைக்குச் சாப்பிடவும்.

சிரசில் முக்கால் நீ வடியுறதுக்குத் தயிலம் :-

சங்கம் வேர் ஒரு [illegible] வெட்டி யிடித்து பதக்குத் தண்ணீர் விட்டு ஒரு படியாய்க் காச்சி நல்லெண்ணை படி.க, கஸ்தூரி மஞ்சள் பலம்.½, கருஞ்சீரகம் பலம்.¼, நறுக்கிப் போட்டுக் காய்ச்சி முழுகவும். [illegible]

பித்த சூடு பசியில்லாததுக்கு மேனிச் சூரணம் :-

தாளிச பத்திரி பலம்.உ, மிளகு பலம்.உ, சுக்கு பலம்.உ, ஆனைத் திப்பிலி பலம்.உ, கூகை நீர் பலம்.உ, சன்ன லவங்கப் பட்டை பலம்.உ, சீனி சர்க்கரை பலம்.12, பசுவின் பால் விட்டு யெல்லா சரக்குகளையும் நறுக்கி யெல்லா சர்க்கரை கலந்து பால் விட்டுப் பிசைந்து பாலும் தண்ணீரும் சமதையாய் விட்டு சட்டிக்குள் ஊத்தி மேலே வேடு கட்டி மருந்தை வைத்து சட்டி கொண்டு மூடி இரண்டு நாழிகை யெரித்து வெந்த பிறகு எடுத்து களச்சிக்காய்ப் பிரமாணம் உருட்டி நிழல் உணத்திக் காய வைத்து இரண்டு வேளையும் சாப்பிடவும். அரை மண்டலம் சாப்பிடவும். இச்சா பத்தியம். க்ஷயம், இருமல், புகைச்சல், பொருமல், வயத்தாலே போறது வலி கடுப்பு எல்லாம் கேட்கும். க்ஷயத்துக்கு புட்லாரி வேர் கொண்டு வந்து சுக்கு, அரத்தை, மிளகு கட்டிப் போட்டு மூன்று நாளைக்கு கசாயம் வைத்துச் சாப்பிடவும். [illegible]

க்ஷயம் ரத்த காசம் ஈளை இளைப்புக்கு மருந்து :-

புல்லுகளில் இருக்கிறப் பனி பூச்சி நிறையக் கொண்டு வந்து வடிகட்டி ஒரு பலம் நிறையும் கால் பலம் தேனும் விட்டு மத்திச்சு சாப்பிடவும். இந்தப் படிக்கு இரண்டு வேளை அரை மண்டலம் சாப்பிடவும். இச்சா பத்தியம்.

வேறு :- புடையாத்தி வேர் கொண்டு வந்து இரண்டு பலம் வேர் யிடித்து சுக்கு பலம்.1/ மிளகு பலம்.¼, சீரகம் பலம்.¼ கசாயம் போட்டு பத்து நாளைக்கு சாப்பிடவும். புளி தள்ளவும்.

(வேறு)

துத்தம் பலம்.க, கருப்பக் கொடி வெத்திலை நருக்கிச் சாறு பிழிந்து அரைத்து வில்லைத் தட்டிக் காய வைத்து மேற்படி அறைத்து உள்ளுக்கு வைத்து சீலை மண் செய்து 5. விராட்டியில் புடம் போடவும். ஒரு விராகனிடை பசு நெய் யெடுத்து மேற்படி நிறையில் சேர்க்கத் குழப்பிக் கொடுக்கவும்.

ரெத்த காசத்துக்கு :-

அத்திப் பழத்தை பிழிந்து தேன் கூட்டி மூன்று நாளைக்கு சாப்பிடவும். மேற்படி தலைக்கு தென்னம் பூ பூ விரியாத பூவும், சித்திர பாலாடையும், கல் நாரும் அரைத்து கலக்கிக் கொடுக்கவும். கம்பரிசி மா யிடித்துக் கஞ்சி காச்சிக் கொடுக்கவும். செம்பருத்தி யிலை எலுமிச்சை காயளவு அரைத்து இள நீரில் கலக்கி முறித்து வடி கட்டி மூன்று நாளைக்கு கொடுக்கவும்.

காசத்துக்கு: ஆவாரை விழுதி யிலவம் பட்டை பற்படாகம் தென்னம் பூ பாளை ஆடாதோடை அறுகம் வேர், முந்திரிப் பழம் கஷாயம் போட்டு யிறக்கி தேன் சர்க்கரை கலந்து கொடுக்கவும்.

ரெத்த வாந்திக்கு:- விஷ்ணு கிராந்தி பலம்.3, இளநீர் தண்ணீர் படி.க, சீரகம் பலம்.½ பொட்டணம் கட்டி மேற்படி கஷாயத்தில் வேக விட்டு மேற்படி கஷாயத்தில் அரைத்து கலக்கிச் சீனி சர்க்கரை கல்கண்டும் போட்டு சாப்பிடவும்

<u>சுவாச காசத்துக்கு:-</u>

நெல்லி முள்ளி பொன் அரிதாரம் கோஷ்டம், காயம் வகைக்கு பலம்.½ எல்லாம் அரைத்து பசுவின் பாலில் அரைத்து வேப்பெண்ணெயில் எரித்துக் கொள்ளவும். நித்தம் இரண்டு காசிடை கொடுக்கவும். பருப்பு, முளக்கீரை சேர்க்கவும்.

<u>க்ஷயத்துக்கு முயல் நெய்:-</u>

க்ஷயத்துக்கு முயல் ரெத்தம் படி.க, வெள்ளாட்டு நெய் படி.க, ஆதண்டைச் சாறு படி.க, இஞ்சிச் சாறு படி.க, சங்கம் சாறு படி.க, கண்டங் கத்திரி வேர் பலம்.க, நீலிவேர் பலம்.க, வாலுழுவை பலம்.க, சிறுதேக்கு பலம்.க, கற்கடகசிங்கி பலம்.க, கருவங்கம் பலம்.க, மேற்படி சாறு விட்டு எல்லா சரக்கும் அரைத்து நெய்யில் கலக்கி நீர் சுண்டக் காச்சிப் பதத்தில் எடுத்து வடித்து தேவி பூசை பண்ணி இரண்டு வேளையும் சாப்பிடவும். பத்தியம் மிளகாய், அரைபுளி கெட்டி மோரு. இச்சா பத்தியம். கடினமா யிருக்க வேணும்.

<u>இதுக்கு தீருகிற வியாதி விபரம்:-</u>

சஞ்சாரம், சேற்ப்ம ரோகம், மீளா சுவாச காசம், யிருமல் ரெத்த காசம், கொரு கொருப்பு மேல் சுவாசம் வெளப்பு பருவறை தெக்குத்தி நோவு எல்லாம் கேட்கும்.

<u>க்ஷயம் விளப்புக்கு:-</u> முடக் கொத்தான் சாறு படி.½, கருங்குருவை அரிசி கால் வீசை மேற்படி சாறு சமையல் பண்ணி மூன்று நாளைக்கு சாப்பிடவும். அப்புறம் சாதம் சமையல் பண்ணிச் சாப்பிடவும். புளி, புகையிலை மோரு தள்ளுபடி.

<u>விக்கல் சத்திக்கு:-</u>

தேத்தான் விரையை தகர்த்து ஊற வைத்து ஒரு படி தண்ணீர் வைத்துக் காய்ச்சி கொடுக்கவும். கண்டங் கத்திரி வேர், எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்துக் கொடுக்கவும். சித்தா மணக்கெண்ணெயில் வெள்ளி உரைத்துக் கொடுக்கவும்.

<u>விக்கலுக்கு:-</u>

ஒத்த இளவிக் கூடு மண் எடுத்து கஷாயம் போட்டுக் கொடுக்கவும். குறவே மீது பத்த பதினைந்து மீது பிடித்து உலையத்தில் போட்டு ஒரு படி பச்சைத் தண்ணீரில் விட்டு பத்து நாளி சிரயித்து மீனை வெட்டு அந்த வடக்கைத் தண்ணீரில் மிளகாய், மிளகு, சீரகம் மல்லிகை உப்பு அரைத்து ரசம் பண்ணி சாப்பிட்டு வரவும். இந்த படிக்கு பாசாணத்து முறிவு கொடுக்கவும்.

<u>அய செந்தூரம்:-</u>

அயம் பலம்.க, வசிக் காந்தம் பலம்.க, ரசம் பலம்.½, வீரம் பலம்.½, கொட்டைச் கிரந்தி சாறு விட்டுஅரைத்து வில்லை தட்டிக் காய வைத்து 50 விரட்டியில் புடம் போடவும். அப்புறம் குமிரி சாத்தில் ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டி 50 விரட்டியில் புடம் போடவும். மூன்றும் புடம் பொடி தழை சாறு பொற்றலைச் கையாந் தகரை சாறு சீமா நெல்லிச் சாறு எலுமிச்சம் பழச் சாறு விட்டு நாலு சாமம் அரைத்து வில்லை தட்டி 30 விராட்டியில் புடம் போடவும். க்ஷயம் இருமல், வாந்தி சத்தி குன்மம் தாது புஷ்டி தேனிலாவது வெண்ணெயிலாவது கொடுக்கவும்.

<u>வாத பித்த சிலேட்டும சுரத்துக்கு கஷாயம்:-</u>

குமிள வேர், பாதிரி வேர், நிலவேம்பு, சிறுகாஞ்சொறி வேர், நன்னாரி வேர், விலாமிச்சை வேர், சாறணை வேர், குமுந் தொட்டி வேர், சின்னி வேர், நீர்முள்ளி வேர், சிறு தேக்கு, அரத்தை, சித்தாமல்லி, கோரைக் கிழங்கு, மல்லிகை கடுக்காய், மிளகு, இலுப்பைப் பூ வகைக்கு பலம்.½, எல்லாம் கஷாயம் போட்டுக் கொடுக்கவும். புளி தவிர்க்கவும்.

<u>பித்த சுரத்துக்கு கஷாயம்:-</u>

கண்டங் கத்திரி வேர், வேலிப் பருத்தி வேர், விஷ்ணு கிரந்தி வேர், வாய் விளங்கம், நல்ல துளசி, குமிளம் வேர், கோஷ்டம், செங்களி நீர், சிறு காஞ்சொறி வேர், தாதுவளை மல்லிகை சக்கை, செவியம் வகைக்கு பலம்.½,

எல்லாம் கசாயம் போட்டு மூன்று நேரம் கொடுக்கவும். புளி தவிர்க்கவும்.

சுரத்தின் மேல் வீக்கத்துக்கு:-

சுரைத் தண்டு, பூசனித் தண்டு, நீர்முள்ளி சமூலம், முருங்கையிலை சமூலம் கசாயம் போட்டு கொடுக்கவும். புளி தவிர்க்கவும். மூன்று நாள் சாப்பிடவும். பிறமியிலை கடுக்காய்த் தோல், சங்கம் பழம் வகைக்கு பலம் ½ யெல்லாம் சேர்த்து கசாயம் போட்டுக் கொடுக்கவும்.

மகா வில்வாதி லேகியம்:-

வில்வ வேர் பலம்.50, வில்வத் தழை பலம்.3, விலாமிச்சி வேர் பலம்.3, சிறுவாகை பலம்.3, முன்னை வேர் பலம்.3, முசுமுசுக்கை பலம்.3, கொடிவேலி வேர் பலம்.3, பாதிரி வேர் பலம்.3, நன்னாரி வேர் பலம்.3, சித்தமல்லி பலம்.3, பெருமல்லி பலம்.3, குட்டி விளாவேர் பலம்.3, பெருவிளா வேர் பலம்.3, வாகை வேர்.பலம்.3 யெல்லாம் யிடித்து யிரு நாழி பச்சை தண்ணீர் விட்டு யெரித்து இரண்டு படியாய் காய்ச்சிசவும், லவங்கம், யேலம், கோஉட்டம், அதிமதுரம், கெந்தகம், சீரகம், சாஸ்திர வேதி, தாளிச பத்திரி, செண்பகப்பூ, அக்கிருக்காரம், மல்லிகை, வாய் விளங்கம், முந்திரி பழம், பேரீச்சம் பழம் வாலுளுவை மாசக்காய் பலம்.½, சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, யிலுப்பைப் பூ, தேத்தான் விரை வகைக்கு பலம்.க, தேவதாரு கட்டை எல்லாம் யிடித்து நாள் பண்ணி யிஞ்சி சாறு படி.¼ நெய் படி.½ தேன் படி.½, மாதுளம் பழச் சாறு படி.½, எலுமிச்சம் பழச் சாறு படி.½, விளாவிரை பலம்.½, வில்வ விரை பலம்.½, பசுவின் பால் படி.உ, கசாயமும் சாறும் ஒன்று சேர்த்து சீனி, சர்க்கரை பலம்.20 போட்டுக் கிண்டி பதக்கோடே இறக்கி யெடுத்து புன்னைக் காயளவு இரண்டு வேளை சாப்பிடவும். புளி, புகையிலை, பெண் தள்ளவும். தீரும் வியாதி சுவாசம், அரோசியம், வீக்கம், சத்தி யெரிவு, பாண்டு, விஉதபாண்டு, வயறு யெரிவு, உப்பிசம், சிறுநீர் மூல வாய்வு, கால் எரிவு, ஒக்காளம் அன்ன தோஉஷம் சூலை யிருமல் சுரம் அதிசனம் பித்த வெட்டை இவை தீரும்.

காதிலே சீ வடியுறது செவிகாளான் மருந்து:-

ஆகுந்து தொறட்டை பழம், சமுத்திராப் பழம் பலம்.½, கடல் நுரை பலம்.½, கஸ்தூரி மஞ்சள் பலம்.1/8, கருஞ்சீரகம் பலம்.1/8, கொடிக் கள்ளிப் பட்டை பலம்.¼, வால்மிளகு பலம்.½, வலம்புரிக்காய் பலம்.½, காயம் பலம்.1/16 நாக்கு பூச்சி 20 எல்லாம் நாள் பண்ணி மொசுமொசுக்கை கொடி சாறு படி.1/8 நல்லெண்ணை படி.¼, கோழி முட்டை தயிலம் படி.1/16 புன்டு தயிலம் படி.1/16 தேங்காய் யெண்ணை படி.1/16 எல்லாம் எரித்து வடித்து சீசாவில் வைத்துக் கொண்டு காதில் சீ வடிவு செவி காளான் மண்டை குத்துக்கு பஞ்சில் நனைத்து காதுக்கு விட்டு அடைக்கவும். காத டைப்பு, மண்டை குத்து ஒரு தலைவலி கண்டத்துக்கு மேல் பட்ட வியாதி யெல்லாம் கேட்கும்.

குன்மம் வயத்து வலி மலக் கட்டுக்கு மருந்து:

நாக மல்லிகைச் சாறு படி.1/8, புண்ணாக்கு பூடுதழைச் சாறு படி.1/8, முருங்கையிலைச் சாறு படி.1/8, பனைவெல்லம் பலம்.10, பனங் கல்கண்டு பலம்10 பசுவெண்ணை பலம்.5, விளக்கெண்ணை படி.¼ மிளகு, தக்காளிச் சாறு படி.1/8, எல்லாம் கலந்து சூரிய பிடமாக வைத்து வேளைக்கு ஒரு கறண்டி இரண்டு வேளையும் சாப்பிடவும். இச்சா பத்தியம்.

பிள்ளைகளுக்கு கணை உடம்புருக்கிக் கணை சுரம் மருந்து:-

பொற்றலை கையாந் தகரை தழை, பொன்னாங் கண்ணி, தழை, வல்லாரை நீர்ப்பூலான் தழை, மறப்பூலான் தழை, புளியாரை, கீழ்வி தழை, அருகம்புல், மஞ்ச நத்தி வகைக்கு பலம்.க, நிழல் உணர்த்தியாக காய வைத்து நாள் பண்ணி பனங் கல்கண்டு பலம்.15, தேன் படி.1/8, நெய் படி1/8, பால் படி¼ லேகியம் கிண்டி களச்சிக் காயளவு சாப்பிடவும். கரப்பான், பதார்த்தம், மீன் கருவாடு சாப்பிடக் கூடாது.

கோஉட்டம் விராகனிடை.க, காளிச பத்திரி விராகனிடை.க,. சாதிபத்திரி விராகனிடை.உ, சாதிக்காய் விராகனிடை.க, யேலம் விராகனிடை.க, சீரகம் விராகனிடை.க, எல்லாம் நறுக்கி மேற்படி லேகியத்தில் சேர்த்து கொள்ளவும்.

மூலம் தயிலம் மூலச் சூடு பித்தம் கிறுகிறுப்பு மயக்கம், கண்ணீர் வடிவு கண் புகைச்சல் இவைக்கு பட்ட தயிலம்:-

அருகம் வேர் பலம்.100, காவேரி தெளிவு தண்ணீர் பக்காப் படி.100, நாலு ஐந்து பானையில் பங்கிட்டு தண்ணீர் 4 படியாக காய்ச்சி நல்லெண்ணை படி.4 விட்டு பதமா யெரித்து முழுகவும். வெட்டை ரணம் பிடிப்பு, கடிபித்தம்மேகம் அய்யம் எல்லா வியாதியும் கேட்கும். முழுகிற அன்றைக்கு புளி தவிர்க்கவும். குஉட்டம் படரு அண்ட வாய்வு மேகம் சகலமுங் கேட்கும்.

<u>மலக் கட்டு விருத்திக்கு மருந்து பேதி மாத்திரை:-</u>

பிஞ்சுக் கடுக்காய் பலம்.½, சீரகம் பலம்.¼, ரேவல் சின்னி பலம்.¼, குலர் பாக பலம்.¼, சோம்பு பலம்.¼, இள வறுப்பாய் வறுத்து இடித்து சூரணம் செய்து நித்தியப்படி விராகனிடை.½, வெந்நீரில் சாப்பிடலாம். மலசுத்தியாகும்.

<u>பேதிக்கு மாத்திரை:-</u>

நேர்வாளம் விராகனிடை.5, எருமைச் சாணியில் வெவிச்சு பருப்பை யெடுத்துப் பொட்டணங் கட்டி தண்ணீர் கூட்டி காலமே யெடுத்து பூரம் விராகனிடை.க, சுக்கு விராகனிடை.4, கோரோசனை விராகனிடை.5, யிஞ்சி விராகனிடை.4, எல்லாம் நறுக்கி பச்சை தண்ணீர் விட்டு அரைத்து பட்டாணி கடலை பிரமாணம் உருண்டை செய்து ராத்திரி சாப்பிட்டு பிற்பாடு முழுங்கி போடவும். மேல் முடிவு இல்லை.

<u>வெட்டைக்கு:-</u>

மாசுக்காய், சன்ன லவங்கப் பட்டை இரேவு சின்னி முன்றும் சுள் பண்ணி சரியிடை சீனி சர்க்கரை சேர்த்து சூரணம் செய்து 24 நேரம் சாப்பிடவும் இந்திரி போகம் கூடாது. இச்சா பத்தியம்:

<u>குக்குடாதி லேகியம்:-</u>

சுக்கு, அதிவிடையம், சன்ன லவங்கப் பட்டை, கோஷ்டம், அக்கிரக் காரம் ஓமம் குரோசானி ஓமம், வால்மிளகு, மிளகு, சாதிக்காய், கிராம்பு, சாதிபத்திரி, தாளிச பத்திரி, சடாமஞ்சி, திப்பிலி, தெசாபுரம், சித்தரத்தை, பேரரத்தை, ஆனைத் திப்பிலி, ஆனைச் சோம்பு, அதிவிடையம், வெள்ளிப் பூண்டு, சித்திர மூலம், ... நீர் வகைக்கு பலம்.5/8, வறுத்து பொடி பண்ணி அறசிலவு சேர்த்து சங்கங் குப்பி தழை, தருதழை சாறு விட்டு அரைத்து கருப்பு சகை கோழியை அறுத்து தலை கால், குடல் வாங்கி உள்ளுக்கு வைத்து நாலாவது தைத்து மேல் படி சாறு நாழி விட்டு ரெட்டு போட்டுக் கட்டி மேல் கோழியை வைத்து சட்டி போட்டு மூடி இரண்டு சாமம் எரித்து அதை யெடுத்து எலும்பை போக்கி யெல்லாம் யிடித்து அபின் விராகனிடைச், சேர்த்து தேன், நெய் விட்டு கிளறி லேகியம் செய்து கொள்ளவும். களச்சிக் காய் பிரமாணம் சாப்பிடவும். மூலக் கிருணி, சகல வாய்வும் கேட்கும். புளி தள்ளவும்.

<u>கிராணிக்கு கபாடம்:-</u>

சீரகம், சாதிக்காய், அதிவிடையம், கிராம்பு, களச்சிக் கொட்டை வகைக்கு பலம்.¼, திப்பிலி, வெந்தையம், குரோசானி ஓமம், மாசிக்காய், அபின் பூண்டுக்குள் வைத்து வெவிச்சுக் கொண்டு எல்லாம் அரைத்து கஞ்சா கசாயம் போட்டு மேற்படி சாறு விட்டு அரைத்து நெல்லிக்காய் பிரமாணம் உருண்டை பண்ணிக் காய வைக்கவும். காலமே வாழைப் பூவு, சாறுவில் கொடுக்கவும். சாயந்திரம் தயிரில் கொடுக்கவும். புளி தவிர்க்கவும். மிளகாய் கூடாது. கிருணி, ரத்தம், சீதம் பித்த வாய்வு முதலாகியது கேட்கும்.

கிருணிக்கு:- தெசாபுரம் பலம்.க, வறுத்து பொடி பண்ணி தேன் விட்டு குழைத்து சாப்பிடவும்.

<u>லேகிய முறை:-</u>

சாறணை வேர், பிறண்டை வேர் நெரி யெலந்தை வேரு, கொடிவேலி வேர், அமுக்கிலாங் கிழங்கு, மிளகு, சுக்கு, அதிவிடையம், குரோசானி, ஓமம் சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, வெப்பாலை அரிசி, மாதளையோடு பெருங் காயம் வகைக்கு பலம்.½ வெந்தயம் பலம்.உ, நாலு படி பச்சைத் தண்ணீர் விட்டு எரித்து ஒரு படியாய் காய்ச்சி மேற்படி சூரணமா யிடித்து மேற்படி கசாயம் விட்டு அரைத்து ஒரு பானையில் நாகைத் தழையை அரைப்பானைக்கு கொட்டி நாகைத் தழையை கொன்னை. தச்சு தனை கொண்டு மூடி அதன் மேல் நாகைத் தழையைக் கொட்டி சட்டி கொண்டு மூடி ஒரு நாழிகை யெரித்து அப்புறம் மருந்தை யெடுத்துக் கொண்டு தழையைக் கொட்டி போட்டு மருந்தை முன் வைத்த கசாயத்தை விட்டு அரைத்து உருண்டை பண்ணி நாகைத் தழையை கொன்னை தச்சு மூடி மின் போலே பானையில் நாகைத் தழை கொட்டி மருந்தை உள்ளுக்கு வைத்து தழை கொட்டி மூடி ஒரு நாழிகை எரிக்கவும். இந்தப் படி ஆறு தரம் எரித்து அரைத்து அப்ப அப்ப வெவிச்சு பட்டாணி கடலை பிரமாணம் உருண்டை பண்ணி காய வைத்து இரண்டு வேளை தேனில் குழைத்து சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி கிருணி ஆறு மூலம், மூல வாய்வு, ரத்தப் பிறமியம், வயறு கட்டு, ரத்த மூலம், சீய் மூலம், மலப் போக்கு படு களிச்சல், வாய்வு முதலாகியதும் கேட்கும்.

<u>கனைக்கு பிள்ளைக்கு உடம்பு அற வெட்டை சூட்டுக்கு மருந்து:-</u>

இசுல்லி நீர் நாலு சீலி சேத்தில் நாலு நாளைக்கு புதைத்து எடுத்து அந்த நீரில் சேர்க்கு மருந்து யேலக்காய், கோஷ்டம், அதிமதுரம், திப்பிலி,

இலுப்பைப் பூ, சந்தனம், கூகை நீர், முந்திரிப் பழம், கல்கண்டு பலம்.உ, நற்கோலம் வகைக்கு பலம். $\frac{1}{4}$ வறுத்துப் பொடி பண்ணி மேற்படி இளநீர் தண்ணீர் விட்டுக் காய்ச்சி [illegible] பதம் வரும் போது பசுவின் நெய் படி. $\frac{1}{2}$ விட்டுக் கிளறிப் புன்னைக் காயளவு இரண்டு வேளையும் சாப்பிடவும். புளி தள்ளவும். வெட்டை சூடு, புகைச்சல், நீர்க் கட்டு, நீரளிவு, பிள்ளைக்கு கணை யெல்லாம் தீரும்.

நிக்கவே காமரூபி லேகியம் நிகழ்த்துறேன் புலத்தியனே நினவாய்க் கேளு ஆற்கவே காமரூபி ஆன குருவி உடல் ரோமம் வாங்கி பச்சைத் தண்ணீர் மரக்கால் ஆறு விட்டு கசாயம் போட்டுக் காய்ச்சி படி.உ; தேங்காய்ப் பால் படி.உ, ஆவின் பால் படி.உ, பசும்பால் படி.உ, பருத்தி விரைப் பால் படி.க, கசகசா பாலு படி.க, தென்னம் பாளைச் சாறு படி.க, முருங்கைப் பூச்சாறு படி.க, காளை விழுது சாறு படி.க, செவ்வெள்ளி படி.க, நெல்லிக்காய்ச் சாறு படி.க, பொற்றலைக் கையாந் தகரை சாறு படி.க, ஆலாவிழுது சாறு க கீழாநெல்லிச் சாறு படி.க, நல்லாரைச் சாறு படி. $\frac{1}{4}$ வகைக்கு சீறு படி $\frac{1}{4}$ கசாயத்தில் சேர்த்து சீனி சர்க்கரை பலம். 40, அதிவிடையம் மாசக்காய், கடுக்காய்த் தோல், கானிக்காய், சாதிக்காய், கிராம்பு, கோஷ்டம், அதிமதுரம், ஏலம், காளிச பத்திரி, சாதிபத்திரி, குரோசாணி, ஓமம், மிளகு, கொத்தமல்லி, வால்மிளகு சுக்கு. இதற்கு மேல் முடிவு சொல்லப் படவில்லை)

<u>வெட்டைக்கு நீர்க் கடுப்பு நீர் சுருக்கு சதை அடைப்புக்கு:-</u> 24.3.64.

ரெகு சின்னி விராகனிடை.உ, மிந்திரி உப்பு விராகனிடை.க; இரண்டையும் நறுக்கி எருமை மோரில் படி. $\frac{1}{4}$ போட்டுக் கால்படியாய்க் காய்ச்சி சாப்பிடவும். இந்தப் படி மூன்று நாளைக்கு ஆறு வேளை சாப்பிடவும்.

<u>நீர்க் கடுப்பு பவுத்திரம் அண்ட வாய்வுக்கு நீர் அடைப்புக்கு:-</u>

சீனக்காரம் விராகனிடை.உ, முந்திரி உப்பு விராகனிடை.க, எல்லா நறுக்கி அரிசி போட்ட கொதி தண்ணீரில் போட்டுக் கொடுக்கவும். பத்தியம் இச்சா பத்தியம். பெண் இரண்டு மாதம் தள்ளுபடி. கெந்தக செந்தூரம் பசு வெண்ணெயில் 24 நாள் கொடுக்கவும்.

<u>க்ஷயம் இருமல் ரெக்த காசம் மீளை இளைப்பு எலி கடிக்கு மருந்து:-</u>

வீரம் விராகனிடை.4, பூரம் விராகனிடை.4, சாலிங்கம் விராகனிடை.4, நவ்வாசாரம் விராகனிடை.4, எல்லாம் நறுக்கி நாய் விட்டை வெள்ளையாய் பலம்.4 எடுத்து அதை வேறேயாய் நறுக்கிச் செங்கல் பொடி பலம்.10 புதுச் சட்டியில் மேற்படி பொடியை போட்டு அதவும் பேரில் நாய்மலம் பாதி கொட்டிப் பரப்பி அதவும் பேரில் நாய் விட்டைத் தூளைக் கொட்டி மேலே புதுச் சட்டி போட்டு மூடி சீலைமண் செய்து அடுப்பில் வைத்து சந்து விடாமல் நாலு சாமம் எரித்து பதனமாய் எடுக்க மேல் சட்டியில் பதங்கம் இருக்கும். அதை எடுத்துப் பத்திரமாய் வைத்துக் கொண்டு க்ஷயத்துக்கு இருமலுக்கு இரத்த காசத்துக்கு சந்தன அத்தரில் ஒரு விராகனிடை நீரில் ஒரு அரிசியிடை போட்டுக் கலந்து சாப்பிடவும். இந்தப் படிக்கு இரண்டு வேளையும் சாப்பிட்டு வரவும். ஈளை இளைப்பு சுக்கம், எலி கடிக்கு தேனில் அரிசியிடை சாப்பிடவும். பத்தியம் வெள்ளாடு, உடும்பு, முசல் கவுதாரி, மீறு பத்தியக் காய்கறிகள் சேர்த்துக் கொள்ளவும். பெண் புகையிலை தயிரு மோரு நெய் பால் தள்ளுபடி.

<u>பக்ஷவாத சன்னி கை கால் இடுப்பு பிடிப்புக்கு தயிலம்:-</u>

மண் தவளை.10, தொருப்பு எடுத்துக் கரச்சி தயிலத்தை எடுத்து சரியிடை நல்லெண்ணை விட்டுக் காய்ச்சி சசாவில் அடைத்துக் கொள்ளவும். பிடிப்புக்குத் தடவவும். பச்சை பாம்பு பச்சோந்தி முசுறு முட்டை கோழி முட்டை அதிரி வேர் வசம்பு பலம். $\frac{1}{2}$ பூண்டு பலம்.5, வீரம் விராகனிடை.க, பூரம் விராகனிடை.க, லிங்கம் விராகனிடை.க தாளகம் விராகனிடை.க, காந்தம் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, ரசம் விராகனிடை.க, எல்லாம் நறுக்கிப் போட்டு எரிக்கவும். எரித்தவுடன் சுக்கு நறுக்கிப் பொட்டலம் கட்டி எண்ணெயில் தொங்க விட்டு எரித்து உள்ளுக்கு கொடுக்கவும். தனி வேப்பெண்ணையைக் காச்சி வாத நாராயணன் தழையை அரைத்து தண்ணீர் குழப்பி சித்திர மூல வேரை இடித்து பொட்டலம் கட்டி சாறில் நனைத்து எண்ணெயில் நனைத்து ஒத்தடம் அடிக்கவும்.

<u>நீர் சுருக்கு நீர்க் கடுப்புக்கு மருந்து:-</u>

சீனக்காரம் பலம்.உ, மூலைப் பாரா ட்டிக் கரண்டியில் விட்டு சீனக் காரத்தைப் போட்டுக் காய்ச்சி பதங்கமானதுக்கு பிறகு எடுத்து நறுக்கி வெண்ணெயில் குழப்பி பனிரெண்டு நாளைக்கு கொடுக்கவும். காரம், சாரம் கூடாது. இளப்புக்கு கொடுக்கவும் சுறுக்குக்கு ஈர வெங்காயச் சாற்றில் பதங்கத் தேச் சேர்த்து பனிரெண்டு வேளை கொடுக்கவும்.

நீரழிவுக்கு வெள்ளை வெங்காரம் பலம்.உ, காட்டு அட்டை கருப்பு சல்வாய் ஒட்டின அட்டை.5, யெடுத்து அரைத்து தட்டி காய வைத்து ஒட்டில் வைத்து சீலை மண் செய்து 25 விராட்டியில் புடம் போட்டு அரிசியிடை தேனில் நெய்யில் கொடுக்கவும். இச்சா பத்தியம். அப்புறம், சிறு குளப்புளைக் காய வைத்து இடித்து வடிகட்டி சீனி சர்க்கரை கலந்து சாப்பிடவும்.

<u>சுரத்துக்கு கெவுரிக் குளிகை:-</u>

கெவுரி பாஷாணம் பலம்.க, வெள்ளை பாஷாணம் விராகனிடை.க, இரண்டும் வஸ்மன் வெள்ளாவியில் வைத்து அ.த.எடுத்து கொம்பு பாகல்க்காய் உள்ளுக்கு வைத்து சீலை மண் செய்து இரண்டு விராட்டியில் புடம்போட்டு எடுத்து என்னையில் சுருக்கு கொடுத்து கழுவிப் போட்டு எலுமிச்சம் பழச் சாறு விட்டு இரண்டு சாமம் அரைத்து அப்புறம் எலுமிச்சத் தழைச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்துக் கொத்தமல்லிப் பிரமாணம் உருண்டை பண்ணி சன்ன சுரம், தேனிலாவது சுர சத்திலாவது கொடுக்கவும். மேற்படி உருண்டையை எலுமிச்சத் தழையை யிடித்துச் சாறு வாங்கி அந்தச் சாத்தில் இரண்டு நாழி ஊற வைத்து காய வைத்து சுரத்துக்கு ஆள் அறிந்து கொடுக்கவும்.

<u>குன்மத்துக்கு உப்புக் கட்டு விபரம்:-</u>

இந்துப்பு பலம்.க, பொட்டிலுப்பு பலம்.க, கறியுப்பு பலம்.க, கெந்தக உப்பு பலம்.க, சோரை உப்பு பலம்.க, இந்த ஐந்து உப்பையும் வெள்ளாட்டுத் தலையின் மூளை யெடுத்து அதில் சேர்த்து உருட்டி புது கலயத்தில் போட்டு மேல் மூடி சீலை மண் செய்து 50 விருட்டியில் புடம் போட்டு எடுத்துக் கொண்டு அதிலே இரண்டு பலம் உடைத்து பச்சை தண்ணீர் விட்டுக் கல்வத்தில் அரைத்து மூன்று பலம் சுக்கு வாங்கி அதில் தடவிக் காய வைத்து ஏழு தரம் வார்த்து அந்த நறுக்கி தேன் விட்டு அரைத்து மிளகு சேர்த்து அதக்கள்ளே மேற்படி உப்பையும் ஒரு விராகனிடை சேர்த்து இரண்டு வேளை 25 நாளைக்கு சாப்பிடவும். அஷ்ட குன்மமும் தீரும். இச்சா பத்தியம். ஸ்திரி போகம் இரண்டு மாதம் கூடாது.

<u>கெந்தக பற்ப முறை:-</u>

நெ.கெந்தகம் பலம் பச்சைப் பாலில் ஊற வைத்து எடுத்து கொட்டாச்சியில் பச்சைத் தண்ணீர் விட்டு மேல் துணியைக் கட்டி அதன் பேரில் கெந்தகத்தை வைத்து மருந்தில் மண் படாமல் புதைத்து மேல் ஒடு போட்டு மூடி அஞ்சு விராட்டியில் புடம் போட்டு எடுத்து குன்றுமணி பிரமாணம் தேனிலாவது வெண்ணெயிலாவது இரண்டு வேளை சாப்பிடவும். வியாதிக்கு தகுந்தபடி சாப்பிடவும். தீரும் வியாதி பித்த வாய்வு, பசியாமல் இருக்கிறது மேக வாய்வு முதலாகியது தீரும்.

<u>வீர மெழுகு: சகல வியாதிக்கும்:-</u>

வீரம் விராகனிடை.க, பூரம் விராகனிடை.க, சாதிலிங்கம் விராகனிடை.க, தாளகம் விராகனிடை.க, ஊசிக் காந்தம் விராகனிடை.க, நெ.கெந்தகம் விராகனிடை.க, கல்மதம் விராகனிடை.க, கற்பூரம் விராகனிடை.க, சலாசத்து விராகனிடை.க, கல்நார் விராகனிடை.க, பறங்கிப் பட்டை விராகனிடை 18 சேங்கொட்டை நருக்கி பணவிடை.18 அமுக்கிரான் கிழங்கு விராகனிடை.10, ஓமம் விராகனிடை.5, சீரகம் விராகனிடை.5, மிளகு விராகனிடை.5, சுக்கு விராகனிடை.5, வெள்ளருகு சாறு விட்டு இரண்டு சாமம் அரைத்து கொத்தமல்லி பிரமாணம் பன வெல்லத்தில் கொடுக்கவும். புண்ணு புரைகள் கருமேகம், ஊறல் சகல மேகத்துக்கும் கொடுக்கவும்.

<u>ஆறுமுக செந்தூரம்:-</u>

ரசம் கஞ்சி வீரமொன்று, பூரமொன்று, லிங்கமஞ்சு, ரச செந்தூரமஞ்சு, நெல்லி கெந்தகம் ஐந்து சுத்தி செய்து கல்வத்தில் போட்டு இரு சாமம் அரைத்து பின்பு சண்டாள தேன் மொழியாள் பாலில் சாமமரைத்து பிழாலத்தி பொடித்துக் கொள்ளவும்.

<u>மகோதரம், பெருவயறு, விஷ பாண்டு சோகை சன்னி இதுக்கு விரோசனக் குழம்பு:-</u>

சுருதிலிங்கம் விராகனிடை.க, பூரம் விராகனிடை.க, வீரம் விராகனிடை.க சாரம் விராகனிடை.க, என்னை வெங்காரம் விராகனிடை.க, சுத்தி செய்த வாளம் பலம்½ எல்லாம் பனைவெல்லம் சேர்த்து கல்வத்தில் போட்டு அரைத்து சுண்டைக்காயளவு கொடுக்கவும். புளி, புகையிலை தள்ளுபடி.

<u>மகோதரம் பெருவயறுக்கு:-</u>

திருகு கள்ளிப் பால் படி.½, இந்துப்பு விராகனிடை.க, ரசம் விராகனிடை.க, லிங்கம் விராகனிடை.க, குரோசானி ஓமம்.க, தேங்காய்குள் வைத்துச் சாணி அப்பி பத்து விருட்டியில் புடம் வைத்து எடுத்து ஓட்டைப் போக்கி அரைத்து வெல்லப் பாகு விட்டு அரைத்து பத்து நாளைக்குச் சுண்டைக்காய் பிரமாணம் கொடுக்கவும்.

ரெத்த மூலத்துக்கு மருந்து:-

ஆமையோடு சீந்திக் கொடி சுத்தி.25, விருட்டியில் புடம் போடவும். அதை எடுத்து சீந்தில் தழைச் சாறு விட்டு விட்டு அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்து சீலை மண் செய்து 25 விருட்டியில் புடம் போடவும். பற்பத்தை பணவிடை எடுத்து மிள நல்லெண்ணை விட்டுக் சுருக்கி பனைவெல்லம் சேர்த்து அரைத்து மெழுகு யெடுத்து களச்சிக் காயளவு பற்பத்தை உள்ளுக்கு வைத்து இரண்டு வேளைச் சாப்பிடவும். மண்டலம் சாப்பிடவும். புளி தள்ளுபட.

அண்டச் சுன்னம்:-

கோழிமுட்டை, வெள்ளைக் கருவு ஊத்திப் போட்டு வீரம் விராகனிடை.உ, உள்ளுக்கு போட்டு நாலு நாளைக்கு வெய்யிலில் வைத்து சீலை மண் செய்து 50 விராட்டியில் புடம் போடவும்: அண்ட வாய்வுக்கு களச்சிக் காய் நறுக்கி பற்பத்தை வெண்ணெயில் மத்திச்சு சாப்பிடவும். புளி தள்ளவும்.

இஞ்சி லேகியம்:-

இஞ்சி பலம்.10, சீரகம், மிளகு, யேலம், அதிமதுரம், திப்பிலி, மிளகு, கோஷ்டம், திப்பிலி மூலம் வாயுருவை, காளிச பத்திரி, கடுகு, கொத்தமல்லி, சித்திரமூலம், கடுக்காய், பூவு குரோசாணி ஓமம், அமுக்குரு, கசகசா, லவங்கப் பத்திரி, கொத்தமல்லி, தாளிச பத்திரி வகைக்கு பலம் $\frac{1}{4}$ எல்லாஞ் சூரணம் செய்து சீனி சர்க்கரை பலம்.5, தேன், நெய் விட்டுலேகியமாய்க் கிண்டி கொட்டைப் பாக்கு அளவு ரெண்டு வேளை சாப்பிடவும். ஐந்து நாள் புளி தவிர்க்கவும். இச்சா பத்தியம்.

தாளிச பத்திரி லேகியம்:-

தாளிச பத்திரி சிறுநாகப்பூ, அதிவிடயம் சடாமஞ்சி, செங்கொட்டை ரச கற்பூரம் வகைக்கு பலம்: $\frac{1}{4}$ இடித்துச் சூரணம் செய்து கொப்பறைத் தேங்காய் பாலு விட்டு அரைத்து வெள்ளைப் பூண்டு பலம்.உ, பனைவெல்லம் பலம்.4, முறுக்கி அரைத்து எலுமிச்சங் காயளவு நல்லெண்ணை படி.க, பசும்பால் படி. $\frac{1}{2}$ எல்லாங் கலந்து எரித்து லேகியமாய்க் கிண்டி கொட்டைப் பாக்களவு இரண்டு வேளை சாப்பிடவும். ஐந்து நாள் உப்பு தள்ளுபடி. மறுக ஐந்து நாள் உப்பு வைத்துக் கூட்டவும். மறுக இச்சா பத்தியம். கரப்பான் பதார்த்தம் கூடாது.

ரச மணி:-

ரசம் பலம்.க, கோவைத் தழைச் சாறு விட்டு பிழிந்து ரசம் விட்டுக் காய்ச்சி யிறுக விட்டு முகறம் பண்ணி புளியைக் கரைத்து அதில் காயில் போட்டுக் கிண்டிக் கலக்கவும். மணியை வாயில் போட்டடக்கி கொண்டு இருந்தால் ஸ்திரீ போகத்தில் விந்து இறங்க மாட்டாது. [illegible]

ரசம் வெட்டைக்கு:-

ரசம் பலம்.க, உருக்கி சிவகிரந்திச் சாறுவிட்டு ஊதினால் வெட்டை ஆகும். அப்புறம் சரியிடை தாம்பூரம் சரியிடை கொடுத்தால் வெள்ளை ஆகும்.

அப்பிரக செந்தூரம்:-

சிருஉந்ன அப்பிரகம் பலம்.க, புளிச்சக் காடித் தண்ணீர் விட்டு வேவிச்சு அலம்பிப் போட்டு வன்னி தழையில் யிடிக்கச் சாறு வாங்கிக் கல்வத்தில் அரைத்து வில்லை கட்டி ஓட்டுக்குள் வைத்துச் சீலை மண் செய்து 100 விராட்டியில் புடம் போடவும். பணவிடை தேனிலாவது வெண்ணெயிலாவது இரண்டு வேளை சாப்பிடவும். கால் மண்டலம் சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதி நீரழிவு, நீர்க் கடுப்புப் பவுத்திர சமூலச் சூடு மேக வாய்வு முதலாகியதும் சேட்கும். இச்சா பத்தியம்.

அன்னபேதி செந்தூர முறை: ஊது சாமாலைக்கு:-

அன்னபேதி பலம்.க, வேலிப் பருத்திச் சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி ஓட்டுக்குள் வைத்து சீலை மண் செய்து 20 விருட்டியில் புடம் போடவும். பணவிடை தேனிலாவது வெண்ணெயிலாவது வாழைக் கிழங்குத் தண்ணீரிலாவது சாப்பிடவும். வாய்வு பிடிப்பு, சூலை வாய்வு, நீர்க் கோர்வை யெல்லாம் கேட்கும். இச்சா பத்தியம்.

பித்த வாந்திக்கு:-

தும்பைத் தழை யிடித்துக் கசாயம் பண்ணி மிளகு ரசம் பண்ணி சாப்பிடவும்.

பீனிசம் ஏழுக்கு நசியம்:-

மாதுளைப் பூ விராகனிடை.க, எருக்கம் பூவு விராகனிடை.க, கருங்குறும்ப் பூ விராகனிடை.க, இது மூன்று சரக்கையும் முலைப்பால் விட்டு அரைத்து நாசியில் புளியவும். புளி தள்ளவும்.

பீனிசம் ஏழுக்கு தயிலம்:- நல்லெண்ணை, கய்யாந்தகரை சாறு படி. $\frac{1}{4}$, பொன்னாங்கண்ணி

சாறுபடி.$\frac{1}{4}$, வெத்திலைச் சாறு படி.$\frac{1}{4}$, அவரிச் சாறு படி.$\frac{1}{2}$, முசுமுசுக்கைச் சாறு படி.$\frac{1}{4}$, ஆடாதோடைச் சாறு படி.$\frac{1}{4}$, கருசெண்பகப்பவு பலம்.உ, பனிசக் கிழங்கு பலம்.உ, அமுக்கிராங் கிழங்கு பலம்.உ, வேப்பம் பருப்பு பலம்.உ, சீரகம் பலம்.க, மிளகு பலம்.க, தானிக்காய், தக்கோலம், கஸ்தூரி மஞ்சள் பலம்.க, கடுக்காய்த் தோல் பலம்.க, பசும் பால் படி.$\frac{1}{2}$, பாலு விட்டு அரைத்து எல்லாம் எண்ணெயில் கலக்கி பதமா யெரித்து வடித்து தலை முழுகவும். புளி தள்ளவும். நாசியில் எண்ணை அந்தி, சந்தி விடவும். மீன், மாமிசம் கூடாது.

பீனிசத்துக்குத் திரி:-

பூவரசம் பட்டை, வெள்ளெருக்கம் வேர், மலைதாங்கி வேர், கஸ்தூரி மஞ்சள், சிறுநாபப்பூ, நெல்லிக்காய், செந்தகம், வெடியுப்பு, புனுகு, சட்டம் மாதளை, புவு குங்குமப் பூ, புகையிலைச் சாறு விட்டு அரைத்து துணியில் தடவித் திரி பண்ணி கொளுத்தி மூக்கில் பிடிக்கவும். புண்ணு சீ நாத்தம் மண்டை பூச்சி யெல்லாம் கேட்கும். புளி தள்ளவும்.

வயத்து வலிக்குச் சூரணம்:-

பறங்கிப் பட்டை பலம்.க, பாலில் வேகவிட்டு சிறுதேக்கு பலம்.$\frac{1}{2}$, சுக்கு பலம்.$\frac{1}{2}$, சீரகம் பலம்.$\frac{1}{2}$ கடுக்காய் பலம்.$\frac{1}{2}$, வால்மிளகு பலம்.$\frac{1}{2}$, கடுகுரோகணி பலம்.$\frac{1}{2}$, பனங்கல்கண்டு பலம்.$\frac{1}{2}$, நிலையாவாரை பலம்.க, எல்லாம் சூரணம் செய்து இரண்டு வேளை சாப்பிடவும்.

கூழ்பாண்ட லேகியம்:-

பூசனிக்காய் சாறு படி.உ, காளவிழுதுச் சாறு படி.க, தென்னம் பூச் சாறு படி.க, எலுமிச்சம் பழச் சாறு படி.க, பசும் பால் படி.க, சீனி சர்க்கரை பலம்.10, பாகு சேர்த்து சீரகம், மல்லிகை, கோஷ்டம், மிளகு, ரெகு சின்னி, மர்சக்காய், யேலம், சாதிக்காய், சாதிபத்திரி, தாளிச பத்திரி, அதி மதுரம் வகைக்கு பலம்.க, சூரணமா யிடித்து பாகில் காலி நெய் படி.$\frac{1}{2}$, விட்டு எரித்து மெழுகு பதமா யெடுத்து புனைக்காயளவு சாப்பிடவும். நீர் வியாதி அஸ்தி சுரம், அஸ்தி வெட்டை, பிறமி ரெத்தம், வெள்ளை தீரும். விந்து ஊறும். தேக புஷ்டி உண்டாம். பித்தம் வுரோசிகம் அன்ன தோஷம் கேட்கும்.

சன்னி யிசிவு நரம்பு பிடிக்கு நசியம்:

முசுறு முட்டை நாக்கு பூச்சி கடுகு காயம், திப்பிலி, வசம்பு, பூண்டு இஞ்சி எல்லாம் நசுக்கி முலைப் பாலில் நனைத்து நாசியில் விடவும். சன்னி யிசுவு முதலாகியதும் கேட்கும். புளி தள்ளுபட.

பூரக் கட்டு வகை:-

பூரம் பலம்.க, முலைப்பால் பத்து நாளைக்கு ஊற வைத்து பண்டு பலம்.5, முளைபோக்கி மூன்று சாமம் சூறச் சொடுத்து அதை சுறண்டி யெடுத்து ஒட்டில் வைத்து பொட்டிப்பு பாதி ஒட்டில் பரப்பி அது மேல் பூரத்தை வைத்து அதின் மேல் உப்பை கொட்டி மூடி கோழி முட்டை 5 உடைத்து வெள்ளைக் கருவை விட்டு அடுப்பில் வைத்து கால் நாழி கமல தீயாக யெரித்து உப்பு உருகினது பக்தாமல் புகச்சல் கண்டு உடனே யெடுத்து ஆற விட்டு யெடுத்து சுறண்டி யெடுத்துக் சொள்ளவும். சன்னி சுரம் நாலறட்சி மலக்கட்டு இவைகளுக்கு அருபான மறிந்து உரைத்துக் கொடுக்கவும். தேக புஷ்டி, விந்து ஊறும் உஷ்ணம், பித்த வாய்வு, கவுசை மூலமுடு கண்ணெரிச்சல் யெல்லாம் தேட்கும்.

நீர்க்கட்டு நீரடைப்பு சதையடைப்பு கல்லடைப்புக்கு:-

நெருஞ்சிச் சாவல், சூடலை எடுத்து பசுவின் நெய் விட்டு அரைத்து மெழுகு பண்ணி களச்சிக்காய் பிரமாணத்தில் மேற்படி அண்ட மெழுகு சேர்த்துக் கொடுக்கவும். அதில் பிடிக்காத போதல் சீனக்காரம் பலம்.உ, பொடி பண்ணி பசு வெண்ணெயில் வைத்து பணவிடை கொடுக்கவும். மேற்படி கோழிக் குடல் மெழுகும் கொடுக்கவும். சேர்த்துக் கொடுக்கவும்.

பகூவாத சன்னிக்கு:-

தாழுதாழை வெள்ளாட்டுக் கோமியம் விட்டு வணக்கி கட்டவும்.

வீர மெழுகு:-

சுண்ணம்பு நீரில் படி$\frac{1}{2}$, எலுமிச்சம் பழச் சாறு படி1/8, சீனி பலம்1$\frac{1}{2}$ கலந்து சாப்பிடவும். மோரும் சோறும், சீனி சர்க்கரை போட்டுச் சாப்பிடவும்.

கெட்ட ரோகத்துக்கு முள்ளங்கி யெண்ணை:-விளக்கெண்ணை படி $\frac{1}{2}$ முள்ளங்கிக் கிழங்கு பலம்.[illegible], பெதளம் பலம்.க, ஒரே விறகா யெரித்து மெழுகு பதமா யெடுத்து ஆள் அறிந்து கொடுக்கவும். வயத்து வலிக்கு கொடுக்கவும் மோரும், சோறும்

சாப்பிடவும். சீனி சேர்த்துக் கொள்ளவும்.

நீர்க் கட்டுக்கு:-

பொட்டிலுப்பு பச்சை உப்பு பலம்.க, பொடுதலை அரைத்து உள்ளுக்கு வைத்து இரண்டு விராட்டியில் புடம் போடவும். எடுத்துச் சுண்டைக்காய் பிரமாணம் வெண்ணெ யில் கொடுக்கவும்.

வெள்ளி பற்பம், நீர்க் கடுப்பு வெட்டைக்கு:-

வெள்ளி தகடு தட்டி மகிழம் பூ சாறு வாங்கி அந்தச் சாற்றில் தகட்டைக் காச்சிக் காய்ச்சி யேழு திரம் சுருக்கு கொடுத்து மேற்படி சக்கையை அரைத்து உள்ளுக்கு வைத்து சீலை மண் செய்து கோழிப் புடம் போடவும். சந்தன அக்கார், மாதளம் பழச் சாற்றில் கொடுக்கவும்.

காந்த செந்தூரம்:-

காந்தம் பலம்.க, நெல்லி கெந்தகம் பலம்.க, கய்யாந்தகரை சாறு விட்டு அரைத்து ஒடு மூடி சீலை மண் செய்து கெசபுடம் போடவும். மேற்படி கெந்தக யிடைக் கிடை மேற்படி சாறு விட்டு கெசபுடம் போடவும். சித்திர மூலக் கசாயம் ஒரு புடம் யிஞ்சி சாறு ஒரு புடம்.

சகல வாய்வு யிடுப்பு வலிக்கு:-

வீரம் விராகனிடை.க, பூரம் விராகனிடை.க, சாதிலிங்கம் விராகனிடை.க, தாளகம் விராகனிடை.க, ரசம் விராகனிடை.க, நெல்லி கெந்தகம் விராகனிடை.க, மனோசிலை விராகனிடை.க, வெங்காரம் விராகனிடை.க, சவுக்காரம் விராகனிடை.க, ஊசிக் காந்தம் விராகனிடை.க, சுக்கு விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, மல்லிகைவிராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, பறங்கிப பட்டை விராகனிடை.க, கொப்பரை தேங்காய் உ. மேற்படி சரக்குகளை சுத்தி பண்ணவும். முலைப்பால் அத்திப் பாலில் சுத்தி.

செங்கொட்டை பலம்.உ; எருமைச் சாணியில் வேக வைத்து மூக்கை நசுக்கி மறுபடி மேற்படி சாணியில் கொதிக்க வைத்து அலம்பி அப்புறம் அரைக்கால் படி அரிசி யும், கொட்டையும் வேக வைத்து அரிசி வெந்தபிறகு எடுத்து அலம்பி யெல்லாம் சேர்த்து அரைக்கவும். வில்வத் தழைச் சாறு படி.½, ஆவாரைச் சாறு படி.½, புளியந் தழைச் சாறு படி.½, பருத்திப் பிஞ்சு சாறு படி.½ ஈர வெங்காயச் சாறு படி.½, பசும்பால் படி.½, பனங்கல்கண்டு பலம்.உ, விளக்கெண்ணெ படி.உ, பதமாய்க் காய்ச்சி யெடுத்து அந்தி சந்தி பொட்டுக் கரண்டி சாப்பிட்டு வரவும். பாகி யெண்ணெ யெடுத்து சந்தனத் தூள் பலம்.க, மிளகு தூள் பலம்.க, பொட்டணங் கட்டி யெண்ணெயில் போடவும். அந்த யெண்ணெயை முழுகி வரவும். உடம்பு நெருப்பு, கை கால், ஒச்சல் உடம்பு ஊறல் எல்லாம் கேட்கும்.

பெரும்பாடு மகோதரம் வீக்கம் சோகை காமாலைக்கு:

காட்டு பூனையாவது ஊர் பூனையாவது கறி யெடுத்து தலைக் கறி குடல் எடுத்து அறைச் சிலவு முழுமையும் வைத்து அ ரக்கப் புளியில்லாமல் சமைத்துப் பொட்டிலுப்பு பலம்.உ, சிறுசெருப்படி சாறு விட்டு அரைத்து வில்லை கட்டி அகலில் வைத்து சீலை மண் செய்து இருபது விரட்டியில் புடம் போட்டு எடுத்து நறுக்கி கறியில் கலந்து நாலு ஐந்து நாள் சாப்பிடவும். புளியில்லாமல் பொரிச்ச ரசம் சாப்பிடவும்.

முழங்கால் வலிக்கு:-

முட்டை மூன்று அதில் வெள்ளை கருவு யெடுத்து கரண்டியில் ஊத்தி வீரம் விராகனிடை.½, நறுக்கி அதில் போட்டு பதமா யெரித்து மத்துக் களிமாய் தேய்த்து வெண்ணெ பதமாய் தேய்த்து யெடுத்து வலியில் தடவவும்.

ஏங்கல் யிளைப்பு சுவாசம் வயத்து வலிக்கு:-

யுக்ஞை பொட்டிலுப்பு பலம்.5, நாய் குருகு யெஷம் பலம்.5, இடித்து ஒரு கலையத்தில் போட்டுச் சீலை மண் செய்து யிருபது விரட்டியில் புடம் போட்டு அதை எடுத்து பணவிடை யுப்பு தேனில் குழைத்து இரண்டு வேளை சாப்பிடவும். ஸ்திரி போகம் கூடாது. புளி தள்ளவும். அதுக்கு மேல் அரை மண்டலம் இரண்டு வேளை சாப்பிடவும். இச்சா பத்தியம்.

கிருணி மூலவாய்வு வயறு எரிச்சல் பசி மந்தத்துக்கு:-

அபின் பலம்.3/4, மிளகு சுக்கு, சீரகம்; கிராம்பு, ஏலக்காய், திப்பிலி அக்கிரக்காரம், நெல்லிமுள்ளி, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், பனைவெல்லம் தேன் படி 1/8 பசு நெய் படி 1/8 முடிவு யில்லை.

அண்ட வாய்வுக்கு:- ஊசிக் காந்தம் பலம்.க, வெள்ளைக் குண்டு மணிக் தழை இரண்டையும் அரைத்து பத்து வில்லையாய் தட்டிக் காய வைத்து உக்காயில் வைத்து புகையைப் பிடிக்க வும். காந்தம் இரண்டு பலம் வாங்கி பற்பம் பண்ணி தேனில் சாப்பிடவும்.

வயத்தக் கடுப்புக்கு:- சாதிக்காய் பலம்.க, சாதிபத்திரி பலம்.க, பசுவு நெய் பொட்டணங் கட்டி யெரிய விட்டு பசுவின் நெய் பொட்டணங் கட்டி யெரிய விட்டு பாதி வெக்காடு வெந்த பிறகு மெழுகா இறக்கவும். அபின் பன்விடை வாங்கி வெள்ளைப் பூண்டுக்குள் வைத்து அதின் பேரில் ஈர வெங்காயம் உள்ளுக்கு வைத்து மாதளங்காய் உள்ளுக்கு வைத்து சாணி யப்பி செத்தையில் யெரித்து யெடுத்து சாணியை யெடுத்துப் போட்டு கலவத்தில் அரைத்து மெழுகாய் யெடுத்து ஒன்று சேர்த்து மூன்று நாள் 6 வேளை கொடுக்கவும். இச்சா பத்தியம்.

<u>கருமேகம் படர் சொறி குஷ்டத்துக்கு:-</u>

எருக்கம் பால் ஐந்து சொட்டு பனை வெல்லத்தை நசுக்கி அதில் விட்டு மூடி உள்ளுக்குச் சாப்பிடவும். இந்தப் படிக்கு மூன்று நாளைக்கு சாப்பிடவும்.

<u>நீர் கட்டுக்கு:-</u>

வெள்வெங்காரம் பலம்.க, பொட்டிலுப்பு பலம்.க, இரண்டையும் வெள்ளரி விரை சாறு விட்டு அரைத்து ஐந்து விரட்டியில் புடம் போட்டு நெய்யில் கொடுக்கவும். <u>இளைப்பு, பித்த வாய்வு, இரச்சலுக்கு:-</u> இஞ்சி பலம்.4, தோலைப் போக்கி கடலைக்காய் பட்டாணிப் பிரமாணம் நெய் விட்டு வறுத்து காய வைத்து ஏலம், சுக்கு, மிளகு, சீரகம், கோஷ்டம், அதிமதுரம், திப்பிலி, சிராம்பு, வாய்விளங்கம், அக்கிருக்காரம், ஓமம், சன்ன லவங்கப் பட்டை, கடுக்காய் சோம்பு வகைக்கு எல்லாம் நுணுக்கி வடிகட்டி கண்டங்கத்திரி சமூலம் யிடித்து கஷாயம் போட்டு மருந்தைப் பிசைந்து சீனி பலம்.உ, தேன், நெய் விட்டு கிளறி அந்தி, சந்தி களச்சிக்காய் பிரமாணம் சாப்பிடவும். ஆறு நாளைக்கு புளி தள்ளவும்.

<u>மேக ஊறல் கிறந்தி படர் தாமரை வெள் மேகம் அரிப்புக்கு:-</u>

பனைவெல்லம் பலம்.3/ நசுக்கி காட்டு எருமைப் பாலில் நாலு சொட்டு விட்டு நாக்கில் படாமல் உள்ளுக்கு நாலு, ஐந்து நாள் காலை வேளை சாப்பிடவும்.

<u>மேக ரணம், கிறந்தி பவுத்திரம் யோனிப் புத்துக்கு:-</u>

காட்டெருமை பட்டை தாள் பலம்.க, சீனி சர்க்கரை பலம்.4, சேர்த்து வே வேளைக்கு காசிடை சாப்பிடவும். இச்சா பத்தியம். அந்தி, சந்தி மறையும் வரைக்கு இரண்டு வேளை சாப்பிடவும். ஸ்திரீபோகம் முப்பது நாள் தள்ளவும்.

<u>குதக உதிரத்தால் வாய்வாகி அத்மூல் கிறட்சியாய் குன்ம வாய்வாகி குசிக வாய்வுக்கு மருந்து:-</u>

ஆச்சென்ற குசிக வாய்வு பொல்லாது ஆகுந் தான் தீர் கறியாரப்பா கேளு
பேச்சென்ற கொடிவேலி யமுக்கிரா வேர் பெருமருந்து கோப்பிறண்டை நொச்சி சாரு
வேச்சென்ற மாவிலிங்க மிளகுறணை கொளிஞ்சி வெள்ளை சாறணை யடம்பு கள்ளிப் பாளை
ஆச்சென்றறிலையாவாரை யிவைரு அப்பனே வகை வகைக்கு பலந்தான் தாக்கே.

தாக்கியே யிடித்ததனைச் சீலை வடி கொண்டு சூரணமாய் சேர்த்து நீ சொல்லக் கேளு
ஆக்கி யென்ற வால்மிளகு கடுக்காய் தானி யழகான திப்பிலி யோமம் அரக்கை சுக்கு
தாக்கி யிஞ்சி பெருங்காயம் கண்ட திப்பிலி கருப்பை குரோசானி திப்பிலி மூலம்
தாக்கியே சாதிக்காய் கிராம்பு சாதிபத்திரி தாளிச பத்திரியோடு சிறுநாகப் பூவே.

பூவோடு திப்பிலியு விடையமாஞ்சி புகழான செங்கொட்டை ரசகற்பூரம்
கோவோடு வகை வகைக்கு கால் பலமே தாக்கு கொள்ளி நீலை தேங்காய்ப் பால்
விட்டு ஆட்டு.

ஆவோடு முன் மருந்தி சொக்கச் சேரு அடுப்பேத்திச் சட்டிதனை காய வைத்து
கோவோடு நல்லெண்ணை படி தான் வாரு கொதிக்கையிலே வெள்ளுள்ளி ரெண்டு பலந்
தான் போடே

போடவே தோல் போக்கி நெரித்துப் போடு புகழான பனைவெல்லம் நாலு பலம்
போடு

ஆடலே ஆவின் பால் படி தான் வாரு அப்பனே முசுமுசுக்கை யிலை யரைத்து நன்றாய்
தேடவே தேசிக்காயளவு போடு சேர்த்து நீ கிண்டியிலே லேகியம் போலாகும்
சாடியே சூரணத்தைக் கொட்டிக் கிண்டு சம்பா நெல்பொரி யதிலே சேரப் போடே.

சேறையே போட்டு நீ கிண்டி நன்றாய் சேர்த்து மேலேகியம் போல் பண்ணிக் கொண்டு
ஆறே நீ நாளொன்றுக் கந்தி சந்தி அப்பனே கொட்டைப் பாக்களவு கொள்ளு
கூறே நீ வயிற்றிலே வலி குன்மமோடு கிறட்சியோடு வாய்வு உதிர மேக
சோறையென்ற உதிர மெங்கே கட்டி யெங்கே குதகத்தின் வாய்வு குத்தல் அலைந்து
போச்சே

(பத்தியம் உப்பு, புளி, புகையிலையும் 5 நாளைக்கு தள்ளவும்.)

தாளகம் கட்டு முறை:- 25.3.64.

தாளகம் பலம்.க, வேப்பந் தழையை அரைத்து தாளகத்தை உள்ளுக்கு வைத்து அகலில் வைத்துச் சீலை மண் செய்து 15 விருட்டியில் புடம் போடவும். இந்தப் படிக்குப் பொன்னாங்கண்ணி தழையில் வேயும் போடலாம். சுரம், இளைப்பு யிருமல், க்ஷயம், யெல்லாம் கேட்கும். புளி, புகையிலை ஸ்திரீபோகம் தள்ளுபடி. கரப்பான் பதார்த்தம் தள்ளுபடி.

மலசலக் கட்டுக்கு:-

குமரி உள்ளு சோற்றை யெடுத்து சருவச் சட்டியில் ஒரு படி யெடுத்து ஒரு காசு கடுக்காய் யெடுத்து உடைத்து நசுக்கி மேற்படி சோற்றில் பிசைந்து வடிகட்டி பிழிந்து வெண் வெங்காரத்தை நசுக்கி வைத்து மேற்படி நாளை கலக்கி கொடுக்கவும். மலங் கழியும்.

பவள பற்ப முறை சயத்துக்குப் புகைச்சலுக்கு:-

பவழம் பலம்.க, அகலில் எருக்கம் பால் கறந்து பவளத்தைப் போட்டு மூன்று நாளைக்கு ஊற வைத்து மேல் மூடி போட்டு சீலை மண் செய்து 20 விருட்டியில் புடம் போட்டு அதை எடுத்து எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து ஓட்டில் வைத்து சீலை மண் செய்து 20 விருட்டியில் புடம் போடவும். ஆவாரைத் தழைச் சாறு விட்டு அரைத்துபுடம் போடவும். 5 நாள் புளி தள்ளவும். க்ஷயம் இருமல் மூலச் சூடு கேட்கும்.

வெள்ளை வெட்டை சூட்டுக்கு:-

நல்லெண்ணெய் ஆடி வரும் போது 5/8 படி வாங்கி புங்க வேர் வெட்டி வந்து பிளந்து அந்தப் பால் 1/8 படி யெடுத்து யெண்ணெயில் பிழிந்து காலையில் மூன்று வேளை சாப்பிடவும். புளி தள்ளவும்.

ஆடாதோடை லேகியம் க்ஷயம் யிருமலுக்கு:-

ஆடாதோடை தூதுவளை சிறுகாஞ்சொறி; முசுமுசுக்கை, கண்டங்கத்திரி, கரிசாலை, முள்ளங்கி, மணத்தக்காளி, வழுதலை சங்கு நிலையாவாரை சூரணம் செய்து கடுக்காய், கோஷ்டம், திப்பிலி கருஞ்சீரகம், மிளகு, வசம்பு, தும்பை, சித்தரத்தை பேரரத்தை, வாலுளுவை, குகைநீர், சீரகம், கற்கடக சிங்கி, சிறுநாகப்பூ, நெல்லி முள்ளி வகைக்கு பலம்.க, இடித்து முன் மருந்தில் சேர்த்து பசுவின் நெய் படி.க, வெள்ளாட்டு பால் படி.க, தேசிப் பழச் சாறு படி.க, விட்டு அடுப்பில் வைத்து கொதிக்கும் போது பனங் கல்கண்டு பலம். , பனைவெல்லம் பலம் நாலு போட்டுக் காய்ச்சி பாகு பதத்தில் சூரணத்தைப் போட்டு கொம்புத் தேன் பலம்.5, விட்டுக் கிண்டி லேகியமாய்ப் பண்ணிக் கொண்டு அந்தி, சந்தி யிரு போதும் கழற்சிக் காயளவு கொள்ளவும். பவள பற்பம், அரிதார பற்பம் கூட்டி ஒரு மண்டலம் கொள்ளவும். தீரும் வியாதி க்ஷய மேளை, மந்தார காசம், முசலியவை தீரும். இச்சா பத்தியமாய் சாப்பிடவும்.

மன்மத சிந்தாமணி லேகியம்: கை கால் அசதி அஸ்தி உஷ்ணம் இவைகளுக்கு:-

தூதுவளை, வில்வவேரு, அறுகம் வேரு, விலாமிச்சம் வேரு, சீந்திக்கொடி, சந்தனத் தூள் வகைக்கு பலம்.உ, யெல்லா மிடித்து இளநீர் தண்ணீர் நாலு வள்ளம் விட்டு ஒரு படியாய்க் காய்ச்சி அதில் சீனி சர்க்கரை பலம்.10, பாகு காய்ச்சி கடைச் சரக்கு, சிறுநாகப்பூ, சாதிக்காய், செண்பகப்பூ, நீர்முள்ளி விரை, சாதிபத்திரி வால்மிளகு, பறங்கிப் பட்டை, சுக்கு, திப்பிலி, தெசாபுரம், யேலம், சீரகம், மாசிக்காய், தானிக்காய், கடுக்காய், வெந்தயம் அரத்தை, கஸ்தூரி மஞ்சள், முந்திரிப் பழம், கிராம்பு, அமுக்குரா வேர், அக்கிரக் காரம், விளாம்பிசின், கருவேலம் பிசின், வேலாம் பிசின். அரசம் பிசின், சடாமஞ்சி, உள்ளுந்து, சன்ன லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, கோஷ்டம், குருசாணி, ஓமம், கசகசா, வாலுளுவை, திப்பிலி வகைக்கு பலம்.½, கஞ்சா பலம்.½ சுத்தி பண்ணி எல்லாம் யிடித்து தூள் பண்ணி வடிகட்டி முன் பாகில் போட்டுதேன் நெய் விட்டுக் கிளறிக் கழற்சிக்காய் பிரமாணம், அந்தி, சந்தி இரண்டு வேளையும் சாப்பிடவும். பத்தியம் புளி, புகையிலை, பெண் தள்ளவும். இச்சா பத்தியம். வாய்வு, மயக்கம் கை கால் ஓச்சல் தீரும். தாது புஷ்டியுண்டாம்.

எலிகடிக்கு மருந்து:-

பேய்க் கத்தாழைச் சாறு தட்டிடை பிழிந்து மூன்று நாளைக்கு கொடுக்கவும். 5 நாளைக்கு உப்பு, புளி தள்ளவும். கடும் பத்தியம்.

க்ஷயம், யிருமல், ரெத்த காசம், உஷ்ணத்துக்கு கசாயம்:-

புளியந் தழை ஒரு தூக்கு யிடித்து சோற்றுக் கத்தாழை வேரு தட்டி தழையில் போட்டு தண்ணீர் விட்டு யெரிய விட்டு வேரு வெந்த பிறகு இரண்டு வேரு பிழிந்து சீனி சர்க்கரை கலந்து ஐந்து வேளை சாப்பிடவும். அப்புறம் பழந் தின்னி வௌவாலை கொண்டு வந்து உரித்து நசுக்கி கோதி சாதிக்காய், சீரகம், மிளகு, சன்னலவங்கப் பட்டை

திப்பிலி, சிராம்பு வகைக்கு பலம்.$\frac{1}{2}$, நாள் பன்னி விளக்கெண்ணை படி வீசம் நல்லெண்ணை படி வீசம், இலுப்பெண்ணை படி வீசம், பசு நெய் படி வீசம், வேலிப் பருத்திச் சாறு படி.1/8, எல்லாம் வேக வைத்துக் கிளறி லேகியம் செய்து இரண்டு வேளை களச்சிக்காய் பிரமாணம் சாப்பிடவும்.

<u>க்ஷயத்துக்கு லேகியம்:-</u>

ஈர வெங்காயம் படி.$\frac{1}{2}$, சன்னமாய் நசுக்கி வணக்கி வேகிற போது நாலு கோழி முட்டை உடைத்து விட்டு பனவெல்லம் பலம்.உ நறுக்கிப் போட்டுக் கடைந்து எடுத்து வைத்து வேளைக்கு களச்சிக்காய் பிரமாணம் இரண்டு வேளை சாப்பிடவும். இச்சா பத்தியம்.

<u>குளி தாமரைத் தயிலம்: குளிர்ச்சி பித்த மயக்கம் நேத்திர வியாதிக்கு:-</u>

குளி தாமரைச் சாறு படி.க, நல்லெண்ணை படி.க, மெழுகு பதமாய் பொரித்து பச்சிலை பூலாங் கிழங்கு, செண்பக மொட்டு அரைத்துப் போட்டு இறக்கி முழுகி வரவும். கண்ணெரிச்சல், தலைவலி யெல்லாம் கேட்கும்.

<u>உள் மூலத்துக்கு மருந்து: புகை விடரம்:-</u>

நாகதாளிப்பம் சாப்பிடவும். பன்னி விட்டையும், கம்பு உமியும் பன்னி எண்ணெயில் பிசைந்து புளியஞ் சிராய் யெரித்து அதில் போட்டுப் புகை பிடிக்கவும். உரல் ஒந்தாணியில் புகை பிடிக்கவும்.

<u>குன்ம வலிக்கு:-</u>

சீனக்காரம் பலம்.க, கல்லுப்பு பலம்.க, குமரிச் சாறு அரைத்து வில்லை கட்டி காய வைத்து அகலில் வைத்து இருபது விருட்டியில் புடம் போட்டு தேனில் குழைத்து சாப்பிடவும். புளி தள்ளவும்.

<u>மேகம் ஊறல் வாய்விக்கு:-</u>

நல்தாளிப் பழம் 20 நாட்டுச் சர்க்கரை பலம்.4, சங்கம் பழச் சாறு படி.$\frac{1}{2}$, அவுரிச் சாறு படி.$\frac{1}{2}$ எல்லாம் பிசைந்து வெய்யில் புடமாக வைத்து வேளை ஒன்றுக்கு பலம்.1/8 சாப்பிடவும். மேக ஊறல் 21-ம் தீரும்.

<u>குன்ம வலிக்கு மருந்து:-</u>

100 வருஷத்து வேப்பம் பட்டை நாக்கு.க, வெண்தேக்கு முத்தின பட்டை நாக்கு.க, இரண்டையும் இடித்து ஒரு பானையில் போட்டு மூடிச் சீலை மண் செய்து பானையில் பொரித்துக் கழிக் கலையம் புதைத்து அதின் பேரில் பானையைப் புதைத்து 40 விருட்டியில் புடம் வைக்கவும். அதை எடுத்து காசிடை உ வேளை சாப்பிடவும்.

<u>வெட்டை சூட்டுக்கு எண்ணை:-</u>

தேங்காய் பால் படி.க, ஆத்தப் பசளிச் சாறு படி.$\frac{1}{2}$, பொடுதலைச் சாறு படி.$\frac{1}{2}$, வெள்ளெருக்கஞ் சாறு படி.$\frac{1}{2}$, கரிசலாங் கண்ணிச் சாறு படி,$\frac{1}{2}$ வாழைச் சாறு படி.$\frac{1}{2}$, வெள்ளாட்டுப் பால் படி.$\frac{1}{2}$, வெள்ளாட்டுச் சிறுநீர் படி,$\frac{1}{2}$, விளக்கெண்ணை படி.க, எல்லாம் காச்சி நல்மிளகு, சீரகம், யேலம், சிராம்பு வகைக்கு பலம்.க, நறுக்கிப் போட்டுக் காய்ச்சி வடித்து அந்தி, சந்தி இரண்டு வேளையும் பொட்டுத் தறண்டி சாப்பிடவும். இச்சா பத்தியம்.

<u>பித்த வாய்வுக்கு மருந்து லேகியம்:-</u>

நாட்டுச் சர்க்கரை பலம்.10, பசுவின் பால் படி,$\frac{1}{2}$, யிஞ்சி .5, யிஞ்சி வதக்கி அரைத்து சேர்த்துக் கத்தாழைச் சருகு நாள் பலம்.5, கொத்து மல்லித் தாள் பலம்.5, எலுமிச்சம் பழச் சாறு படி.$\frac{1}{2}$ இதுகளை ஒன்றாய்ச் சேர்த்து பசுவின் பால் படி.$\frac{1}{2}$, நெய் படி,$\frac{1}{4}$ தேன் படி1/8 லேகியமாய்க் கிண்டிக் களச்சிக்காய் பிரமாணம் சாப்பிடவும்.

பித்தத்துக்கு: பிறண்டை யிளம் பழுப்பு சேர்த்து செலவு, புளிக் கொழும்புவைத்து சாதத்தில் சாப்பிடவும்.

<u>ஒரண்ட வாதத்துக்கு மருந்து:-</u>

கோழி முட்டை ஒரு பலம்.உ, கோவைக் குழைச் சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி ஓட்டுக்குள்ளே வைத்து 40 விருட்டியில் புடம் போட்டுக் கலுவத்தில் அரைத்து பட்டாணிக் கடலைப் பிரமாணம் வெண்ணெயில் நாலு பொழுது கொடுக்கவும். புளி தள்ளவும்.

<u>நாலா முறைக்கு:-</u>

கொடிக் கள்ளி, புளிக்குள் வைத்து நாலு பொழுது கொடுக்கவும். சுரம் நற்காதே போனால் மிளகு; தகாளிச் சாறு இரண்டு வேளை கொடுக்கவும்.

மூன்று முறைக்கு:- எருக்கம் பூவு.3, பூண்டு பல்லு.க, மிளகு 11 வெற்றிலையில்

உள்ளுக்கு கொடுக்கவும்.

<u>பித்த பாண்டு க்ஷயம் மூக்காலே வாயாலே ரெத்தம் விழுகிறதுக்கு:-</u>

கடுக்காய், அதிமதுரம், கருஞ்சீரகம், சந்தனம் வகைக்கு பலம்.½, எலுமிச்சம் வேர், தென்னம் பாளை, ஆலவிழுது, மாதளம் பூவு, கன்னி மிட்டான் கிழங்கு அறுகம். வேர், ஆடாதோடை யிலை, முத்தக்காசு, பொன்னாங்காணி, முசுமுசுக்கைச் சாறு, வகைக்கு பலம்.க, சிறுகீரை இளநீர் தண்ணீர் படி ஒன்று விட்டுக் காய்ச்சி பசுவின் பாலும் விட்டு அரைத்த பசுவின் நெய் படி.¼, சீனி சர்க்கரை பலம்.3, அடுப்பில் வைத்து லேகியமாய்க் கிண்டி வேளைக்கு களச்சிக் காயளவு சாப்பிடவும். ஆலம் விழுது பூரால் விட்டு சேர்த்துக் கலக்கிச் சாப்பிடவும். ஆடாதோடையிலை பால் விட்டு அவித்து சீனி சர்க்கரை சேர்த்து சாப்பிடவும். மூன்று நாளைக்கு புளி, புகையிலை தள்ளவும்.

<u>மருந்தீட்டுக் சூலம்: இருமல் புகைச்சலுக்கு:-</u>

நல்ல பாலை வடக்கே போற வேரைப் பிடுங்கி பசும் பாலில் அரைத்து மூன்று நாளைக்கு அந்தி, சந்தி குடிக்கவும். உப்பு, புளி தள்ளவும். வெள்ளைக் காக்கரட்டான் வேர் அரைத்து காலையில் குடிக்கவும். 3-வது வெட்பாலைத் தழையும், தேங்காய் பாலும் குடிக்கவும். கோழிச் சாறு குடிக்கவும்.

<u>பித்தம் பாண்டு பிறட்டல் சூட்டுக்கு:-</u>

நிலையாவாரை பலம்.உ, சிவனார் வேம்பு பலம்.உ, மல்லிகை பலம்.உ, சீரகம் பலம்.க, சுக்கு பலம்.½, மிளகு பலம்.½, சீனி பலம்.3, சூரணம் பண்ணி பாலில் புட்டி கட்டி சாப்பிடவும்.

<u>மூலக் சூடு வெட்டைச் சூடு வயறு எரிச்சலுக்கு:-</u>

சோற்றுக் கற்றாழைச் சோறு பலம்.5, சீரகம் பலம்.3, கடுக்காய் பூ பலம்.½, பால் படி,ங, வெங்காயச் சாறு படி.1/8, நெய் படி.1/8, சீனாக்காரம் பலம்.½, பனைவெல்லம் பலம்.க, லேகியம் பண்ணிச் சாப்பிடவும்.

<u>கருமேகம் இடுபத்தொன்றுக்கும் கெந்தக நெய்:-</u>

கெந்தகம் பலம்.க, வெடியுப்பு பலம்.க, மனோசிலை பலம்.க, நவாச்சாரம் பலம்1/8 வீரம் பலம் விரா்கனிடை.½ நெய் விட்டு அரைத்து தணியில் தடவிச் சுருட்டிச் சுடலைத் தயிலம் இறக்கிக் கா்சிடை இரண்டு வேளை சாப்பிட்டு வரவும். புளி தள்ளவும்.

<u>தலைவலி, மயக்கம் ஒருத்தலை வலிக்கு தயிலம்:-</u>

பொன்னாங்காணிச் சாறு படி.½, முசுமுசுக்கைச் சாறு படி.½, மிளகாய்ச் சாறு படி.½, நாரத்தம் பழச் சாறு படி,½, எலுமிச்சம் பழச் சாறு படி.½, எலுமிச்சம் பழம் சந்தனம் பலம்.உ, பச்சிலை பூலா நறுக்கின நாள் நல்லெண்ணை படி.உ, எரித்து கொடுக்கவும்.

<u>கிருணிக் கபாடம் சொண்டி லேகியம்:-</u>

நாகப்பட்டை, அரசம் பட்டை, அத்திப் பட்டை, கருங்காலிக் குச்சி வகைக்கு பலம்.10, எல்லாம் இடித்து வெந்தயம் பலம்.உ, நாலு படி பச்சை தண்ணீர் விட்டுக் கசாயம் ¼ படியாய்க் காய்ச்சி யெடுத்துக் கொண்டு இதுக்கு மருந்து சிறு நாகப்பூ சாதிக்காய், சாதிபத்திரி, கடுக்காய், தானிக்காய், மாசக்காய், சீரகம், ஓமம், குரோசானி ஓமம், மல்லிகை, அதிமதுரம், பொன் முசுட்டை வேரு, சித்தரத்தை, யேலம் வால்மிளகு, காட்டாத்திப்பூ, கடுக்காய்ப் பூவு, மிளகு, சுக்கு, அதிவிடயம், கிராம்பு, வெப்பாலை அரிசி, மாதளையோடு, பெருங்காயம் பலம்.½, களச்சிப் பருப்பு பலம்.க திப்பிலி பலம்.½, வகைக்கு பலம்,ங எல்லாம் இடித்து வடிகட்டி கஞ்சா பலம்.½, சுத்தி பண்ணி வறுத்துப் பொடி பண்ணி அபின் பணவிடை பூக்குள் வைத்து மேற்படி கசாயத்து பனைவெல்லம் பலம்.10-ல் கொட்டி தேன் நெய் விட்டுக் கிளறிப் பதமாய் எடுத்துக் களச்சிக்காய் பிரமாணம் சாப்பிடவும். புளி தள்ளவும்.

வெள்ளாட்டு மாமிசம் சேர்க்கவும். கிருணி மேல் போகிற சீதம் ஊச்சல் கடுப்பு, கிருணி ஆறும் கேட்கும். விட்டுக் கறணை கறிக் கறணை புளிக் கறணை, செம்பிறண்டை சேர்த்து கொடுக்கவும். நாக பற்பம் சேர்த்துக் களச்சிக்காய் பிரமாணம் கொடுக்கவும். கிருணி மூலம், ரெத்த மூலம் உள்மூலம் கேட்கும். புகை பிடிக்கப் புளியந் தணலில் கம்பர் தளிடு புகை பிடிக்கவும்.

<u>சித்திர வல்லாதி: மேகம் ஊறல் பிடிப்புக்கு குளிகைக்கு:-</u>

சாதிலிங்கம், துடம், சாம்பிராணி முறிவு, வீரம், கோழி முறிவு, முருங்கைப் ப முறி நெல்லி கெந்தகம், பச்சை தண்ணீர் முறிவு ரசம் மிளகு முறிவு, வெள்ளுப்பி எலிப் பாஷாணம், குதிரைப் பாஷாணம், குதிரைப் பல் பாஷாணம், கெவுரி பாஷாணம் இந்த நாலு சரக்கும் வல்லன் வெள்ளரவி 15 தரம் வைக்கவும். நவாசாரம் பெருங்காயம் கருஞ்சீரகம், நேர்வாளம், பசகம், ரச செந்தூரம், கானிக்காய், கடுக்காய், ஓமம் குக்கில் சுக்கு, திப்பிலி இந்துப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, மன்னுப்பு கஸ்தூரி மஞ்சள்,

வெள்ளைப் பூண்டு, கடுகுரோகணி, அமுக்குலாங் கிழங்கு, கொடிவேலி சடைச்சி பனை வெல்லம் பலம்.20, வகைக்கு பலம்.½, சேங்கொட்டை பலம்.17 முறிவு சாணிப் பால் நாலு சாமம் யிடிக்கவும். பட்டாணிடக் கடலைப் பிரமாணம் சாப்பிடவும்.

<u>பித்தம் வாய்வு, நீர் மயக்கம், நெஞ்சு வலி வாய்வுக்கு:-</u>

சீரகம், அதிமதுரம், வெந்தயம், கருஞ்சீரகம், சன்ன லவங்கப்பட்டை சதகுப்பை வகைக்கு பலம்.க, கொத்தமல்லி பலம்.6, சீனி கல்கண்டு பலம்.உ, சூரணம் இச்சா பத்தியம். மண்டை யிடிப்பு ஒருதலை வலி கபால வாய்வுக்கு:-
தேள் கொடுக்குத் தழைச் சாறு நல்லெண்ணெயில் விட்டுக் காய்ச்சி முழுகவும்.

<u>மேக வாய்வு, கை கால் குலை பிடிப்புக்கு சேங்கொட்டை வல்லாதி:-</u>

சேங்கொட்டை பலம்.10, மூக்கை நறுக்கி சாணிப் பாலில் வெவிச்சு சுத்தி பண்ணி யிடித்த தோலைப் போக்கித் தானை யெடுத்துப் பறங்கிப் பட்டை பலம்.க, சிவனார் வேம்பு சமூலம் பலம்.உ, வாய்விளங்கம் பலம்,½, திப்பிலி பலம்.½, சிறுதேக்கு பலம்.½, கருஞ்சீரகம் பலம்.½, கடுகுரோகணி பலம்.½, எள்ளு படி.½ தேங்காய்.உ, பனைவெல்லம் பலம்.5, எல்லாம் சேர்த்த நல்லெண்ணை விட்டு இரண்டு சாமம் யிடித்துக் களச்சிக்காய் பிரமாணம் சாப்பிட்டு வரவும். புளி தள்ளவும். புளித்த மோரு சாப்பாடு சாப்பிடவும். மேக முதலாகிய எல்லாம் கேட்கும்.

<u>பேதிக்கு முறை:-</u> சூரத்தாவாரை கடுக்காய்த் தோல், கடுகுரோகணி மூன்றும் கசாயம் போட்டு விளக்கெண்ணை விட்டுச் சாப்பிடவும்.

<u>அய செந்தூரம்:-</u>

லாட யிரும்பு பலம்.10, புளிச்ச மோரில் இருபது சுரம் காய்ச்சி நறுக்கி புடம் போடவும். பழச் சாறு விட்டு அரைத்து மூன்று புடம் போடவும். காமாலைக்கு கொடுக்கவும். புளி தள்ளவும்.

<u>நீர்வடிவுக்குத் தயிலம்:-</u>

கய்யாந்தகரை, பொன்னாங்காணி, கீழாநெல்லி முலைப்பால் விட்டு அரைத்து வில்லை கட்டி நல்லெண்ணை விட்டு காய்ச்சி முழுகவும். புளி தள்ளவும். மேக நீர் பித்த நீர் கேட்கும்.

<u>குதக உதிரக் கட்டுக்கு:-</u>

இந்துப்பு, வளையலுப்பு, பாறை உப்பு, மூங்கிலுப்பு, பொட்டிலுப்பு, ஓமம் சுக்கு, பெருங்காயம், திப்பிலி, சிராம்பு, பூண்டு வகைக்கு விராகனிடை.க, எல்லாம் நறுக்கிப் பேய்க்காய் கொண்டு வந்து இரண்டையும் அரைத்த விரை யெடுத்துப் போட்டு மேற்படி மருந்தை உள்ளுக்கு வைத்து மேற்படிக் காயால் மூடி [illegible]னி சுத்தி நாலு விரட்டி புடம் போட்டு எடுத்து அரைத்து பலமறிந்து களச்சிக் காயளவு கொடுக்கவும். மோருஞ் சோறும் சாப்பிடவும். இரண்டு நாளைக்கு சாப்பிடவும். உப்புத் தண்ணீர் வைத்து சாப்பிடலாம். உதிரக் கட்டு, வயத்து வலி, வாய்வு முதலாகியது கேட்கும். காமைக் குருத்து கொண்டு வந்து கறனையாய் நறுக்கி இந்துப்பு சேர்த்து சாப்பிடவும். பத்தியமில்லை.

<u>உதிரச் சிக்கல் அதிகப் பட்டால் மருந்து:-</u>

மொந்தன் வாழைப்பூச் சிப்பு 20 இடித்து புளிந்த யிஞ்சிச் சாறு பலம்.க, வெல்லம்.5 லேகியம் செய்து வேளைக்கு களச்சிக் காய் பிரமாணம் சாப்பிட்டு வரவும். புளி தவிர்க்கவும்.

<u>சிறு கண்டக பற்ப முறை:-</u>

சிறு கண்டகம் பலம்.5, மிளகு, தக்காளி, தழைப் போட்டு நாகத்தை ஓட்டில் போட்டு உருக்கியால் ஊதி வைத்த மேற்படி சாறு விட்டு அரைத்து வில்லை கட்டி ஓட்டில் சீலை மண் செய்து கெசபுடம் போட்டு எடுத்து வேளைக்கு 4 அரிசி யிடை தேனிலாவது வில்வாதி லேகியத்திலாவது கொடுக்கவும். பித்த வாய்வு, மலப்போக்கு, மயக்கம், பசி தாபம், மூல வாய்வு எல்லாங் கேட்கும். புளி தள்ளவும். பித்

<u>பித்த வாய்வு மயக்கம் மலப் போக்கு அன்ன தோஷம் உஷ்ண வலிக்கு மருந்து:-</u>

மிளகு, சுக்கு, சீரகம், ஓமம், குரோசாணி ஓமம், கற்கடகசிங்கி, காட்டாத்திப் பூ, வால்மிளகு, சிறு நாகப்பூ, மல்லிகை 'யேலம்', சிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, அதிவிடையம், திப்பிலி வகை ஒன்றுக்கு பலம்.½. தேன் படி.1/8 பசுவின் நெய் படி.1/8 பனைவெல்லம் பலம்.5, மாதளம் பழம்.உ, விளாம் பழம்.உ, கச்ச நார்த்தம் பழம்.உ, எலுமிச்சம் பழம்.5, செங்கரும்பு.உ, லேகியம் செய்து சாப்பிடவும். புளி தள்ளவும்.

எலிகடிக்கு, வெருகல் வெளப்பு தலைப் பாரம்:-

ஊமத்தம் பூ நிழல் உலர்த்தியாக காய வைத்து கடுதாசியில் சுருட்டி பத்தி வைத்து புகையை சாப்பிட்டு வரவும். எருக்கம் பூ நிழல் உலர்த்தி காய வைத்து அந்தப் படி புகை சாப்பிடவும். எருக்கம் பழுப்பு காய வைத்து புகை சாப்பிட்டு வரவும். இந்தப் படி அரை மண்டலம் சாப்பிடவும். வீட்டு எலி பிடித்து தலை, குடல் போக்கி அறை சிலவு வைத்து அரைத்து மருதாணி யிலைச் சாறு விட்டுக் கிளறி லேகியம் சாப்பிட்டு வரவும் இதுக்கு புளி தள்ளவும்.

தாம்பிர பற்ப முறை:-

பச்சைப் பாம்பு அடித்து தலையை நசுக்கிப் போட்டு குடலை எடுத்துப் போட்டு விரமலா காச்சி பாலைக் கறந்து வயத்தில் விட்டு செல்லா காசை உள்ளுக்குச் செலுத்தி உருட்டி கலையத்தில் போட்டு மூடி முழங்கால் அளவு குழி வெட்டி 5 நாளைக்கு புதைத்து ஆறு நாள் அதை யெடுத்துக் காசைக் கழுவிப் போட்டு அசலில் விரமலா காச்சி பாலை கறந்து மேற்படி காசை முழுகும் படி கறந்து மேல் அகல் மூடி சீலை மண் செய்து குழி வெட்டி கெசபுடம் 50 விருட்டியில் புடம் போட்டு எடுக்க அரிசியிடை தேனில் கொடுக்கவும். நெய், தயிர் பால் புஷ்டியாய் கொடுக்கவும்.
மேகம் 21, ரணம் பொரிச்சல் எல்லாம் கேட்கும். மூன்று நாளைக்கு காலையில் கொடுக்கவும். கை கண்டது.

தாளகம் பலம்.க, பட்டில் வைத்து மேனிச் சாறு பத்து தரம் சுருக்கு கொடுத்து யெரித்து அதை நறுக்கி அரிசியிடை திப்பிலி தூளில் தேன் விட்டு மத்திச்சு சாப்பிடவும். புளி தள்ளவும். க்ஷயம் முழுமையும் கேட்கும்.

தாம்பிர பற்பம்:-

தாளகம் பலம்.உ, கற்பூர சலாசத்து பலம்.உ குமரி வேர் சாறு விட்டு அரைத்து வில்லை கட்டி அகலில் வைத்து பத்து விருட்டியில் புடம் போடவும். அதை எடுத்து நறுக்கி அரிசியிடை திப்பிலி தூளில் தேன் விட்டு இழைத்து சாப்பிடவும். புளி தள்ளவும்.

தாளகம் பலம்.க, சுண்ணக் கல்லில் சுருக்கு கொடுத்து சரியிடையாய் வைத்து அரைத்து வில்லை கட்டி காய வைத்து பத்து விருட்டியில் புடம் போடவும். திப்பிலி நறுக்கி அரிசியிடை பற்பம் தேன் விட்டு இழைத்து சாப்பிடவும். க்ஷயம், இளைப்புக் கேட்கும். புளி, புகையிலை தள்ளவும்.

****

முற்றும்

****

சு.ச: 25.3.64

269